Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கிகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-553)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 19 (22.02.2003) சனிக்கிழமை இதழ் :143



யாழ். வந்த ஜப்பானிய உயர் மட்டத் தூதுக்குழுவினர்.

# ஜப்பான் வெளியுறவு அதிகாரிகள் குழு நேற்று யாழ். நிலவரம் பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவராலயத்தைச் சேர்ந்த பொருளாதார வர்த்தக நடவடிக்கைகளுக்கான இரண்டாவது செயலாளர் கட்சியோ எகுசி, ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் அபிவிருத்திச் செயற்திட்டப் பணிப்பாளர் ரெட்சுயா இசி, ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் அபிவிருத்திச் செயற்திட்ட அலுவலகத்தைச் சேர்ந்த கிகுச்சி தகசிச மற்றும் கொஷி பல்கலைக்கழகப் பொருளியற்துறைப் பேராசிரியர் கிடேகி எஸ்லோ மற்றும் ஹிசாசி நகமுறா ஆகியோரே நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் வருகைதந்த இவர்கள், நேற்றுக்காலை 11.30 மணியளவில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம், வர்த்தகச் சங்கச் செயலாளர் ஜெனாக்குமார் ஆகியோருடன் யாழ். வர்த்தக சங்கப் பணிமனையில் கலந்துரையாடல் நடாத்தினர்.

இதன்போது யாழ். வர்த்தகர்கள் குடாநாட்டில் வர்த்தக, பொருளாதார

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களைக் குழப்ப தெற்கின் சில தீயசக்திகள் முயற்சி!

## விண்ணாணம் விநாசியர்



நம்பிக்கையைப் பேச்சில மட்டுமல்ல செயல்லயும் தரவேணுமெண்டு தான் சனம் எதிர்பாக்குது...!

## கண்காணிப்புக் குழுத் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையைத் திட்டமிட்டுக் குழப்புவதற்கான முயற்சிகளில் தென்பகுதியிலுள்ள சில சக்திகள் ஈடுபட்டுவருகின்றன. இது குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே எச்சரித்துள்ளார்.**

**புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நேற்று கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டேலில் நடந்த வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ் எச்சரிக்கையை விடுத்திருந்தார்.**

புரிந்துணர்வு உடன்படிக்கை இன்றுடன் ஒரு வருடத்தை பூர்த்தி செய்வதை முன்னிட்டு அதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கை இராணுவமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சம அளவிலான பலத்தைக் கொண்டிருப்பது மிக அவசியம்.

19 வருடகால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு நடத்தப்படும் பேச்சுவார்த்தையின் அடுத்த சுற்று ஆரம்பமாவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. இது சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் விளைவிக்கலாம் என இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டே மேலும் கூறினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் சமாதான நீதிவான்கள் நாளை உண்ணாவிரதப் போராட்டம்

யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் ஒன்றிணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடாத்தவுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு ஒரு வருடம் பூர்த்தியடையும்வேளை, உடன்படிக்கை அம்சங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் மக்கள் முழுமையாக எதையும் பெற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று காலை ஹர்த்தால்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இன்று காலை 10 மணிவரை ஹர்த்தால் அனுஷ்டிக்க மனிதநேய அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## சமாதானப் பேச்சுக்கள் படிப்படியாக முன்னேறும்!

### பிரதமர் ரணில் நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அமைதி நடவடிக்கைகளில் தமக்குத் திருப்தி ஏற்பட்டுள்ளதாகவும், அதேசமயம் 20 வருடகால யுத்தத்துக்கு இறுதி முடிவு காணும்போது மிக அவதானமாக இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஓராண்டு நிறைவையொட்டி ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியில் பிரதமர் ரணில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சமரச முயற்சிகளில் கடினமான

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அந்தோனியார் உற்சவ ஏற்பாட்டிற்காக

## கச்சதீவு சென்ற குழுவினரை வரவேற்ற இந்திய மீனவர்கள்!

கச்சதீவில் தற்போது இந்திய மீனவர்களே தங்கியிருந்து தொழில் புரிகின்றனர் என அங்கு சென்று வந்த நெடுந்தீவுப் பங்குத்தந்தை தலைமையிலான குழுவினர் தெரிவித்தனர்.

அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ள - கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக பங்குத்தந்தை தலைமையில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளர், பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் அடங்கிய குழுவினர் (10 ஆம் பக்கம் பார்க்க)






அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற 'களமும் புலமும்' நிகழ்ச்சியில் - பேர்ளின் பேச்சுவார்த்தைகளுக்காக சென்றிருந்த புலிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். கேணல் கருணா உரையாற்றும்போது திருமதி பாலசிங்கம், கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த இரு படங்களிலும் பங்கேற்ற பெருந்தொகையான மக்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-518)

## தமிழீழ தேசிய விளையாட்டு விழா

# முல்லை, மன்னார், திருமலை அணிகள் நேற்றைய போட்டிகளில் வெற்றியீட்டின!

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக் கிளிநொச்சியில் விறுவிறுப்புடன் நடைபெற்றன.

மாலதி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா தேசியக்கொடியை ஏற்றியதும் விழா ஆரம்பமாகியது.

மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. கேணல் சங்கரின் உருவப்படத்துக்கு சோதியா படையணித் தளபதி கேணல் துர்க்காவும், லெப்.கேணல் விக்ரரின் உருவப் படத்துக்கு போர்ப் பயிற்சிக் கல்லூரி மகளிர் பொறுப்பாளர் அஜந்தியும், மேஜர் அல்பேட்டின் உருவப் படத்திற்கு மகளிர் சிறப்புப் படையணித் தளபதி லெப். கேணல் ஆண்டாளும், மேஜர் சோதியாவின் உருவப்படத்திற்கு தமிழீழ விளையாட்டுக் கழகச் செயலாளர் அன்ரன் அன்பழகனும் ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலை சூட்டினர்.

மன்னார் அணிக்கும் முல்லை 'ஏ' அணிக்கும் மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் முல்லை அணி 9 விக்கெட் இழப்புக்கு அறுபத்திநான்கு ஓட்டங்களைப் பெற்றது. மன்னார் அணி 11.04 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஐம்பத்தொரு ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

தொடர்ந்து மட்டக்களப்பு, கிளிநொச்சி அணிகளுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், மட்டு அணி 127 ஓட்டங்களைப் பெற்றது. கிளிநொச்சி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற போட்டியில், முல்லை 'பி' அணியும் மன்னார் அணியும் உதைபந்தாட்டத்தில் மோதிக் கொண்டன. இதில் மன்னார் அணி 8 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து திருமலை அணிக்கும் கிளிநொச்சி அணிக்கும் இடையில் உதைபந்தாட்டம் நடைபெற்றது. இதில், திருமலை அணி 4 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## அணிசேரா நாடுகளின் மாநாட்டில் சந்திரிகா

மலேசியாவில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்துகொள்ளவுள்ளார்.

1961 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகத் தலைவர்கள் பெரியளவில் கலந்துகொள்ளும் அணிசேரா நாடுகளின் மாநாடாக இது இடம்பெறவுள்ளது.

இதில் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI
426 (302), K.K.S. ROAD,
JAFFNA.
(சி/546)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்றுமுதல் சரத்குமார் (இருவேடம்), மீனா நடித்த
நாட்டாமை
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
M.I. 2
(சி-544)

ராஜா யாழ்ப்பாணம்.
6 ஆவது வாரமாக
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
வசீகரா
10.30, 2.30, 6.30
21 முதல் 24 வரை
SPIDER MAN
இரவு 9.30 இற்கு மட்டும்
(சி-545)



## காணி உறுதிகள் வழங்கல்

காங்கேசன்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி அ.குமரகுருவிடம் பதிவுசெய்யப்பட்ட காணி உறுதிகள் யாவும், அவரது மகன் சட்டத்தரணி கு.செல்வேந்திரனால் 23.02.2003, 24.02.2003 ஆகிய தினங்களில் முன்னாள் அதிபர் சு.தளையசிங்கம் (குறும்பன், ஏழாலை மேற்கு, ஏழாலை) இல்லத்தில் வைத்து உரியவர்களிடம் வழங்கப்படவிருக்கின்றன. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (253)

## இன்றைய நாள் இனிய நாள்

**22-02-2003 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பிரயாணக் கஷ்டம், இல்லச் சிறப்பு, திரவிய லாபம், அதிக பிரயாசை. |
| இடபம் | :- மனச்சோர்வு, பணமுடை, வீண்பழி கேட்டல், பிரயாணம். |
| மிதுனம் | :- பொருட்சேதம், சிநேகிதரால் கவலை, குடும்ப மகிழ்ச்சி, வாகன சுகம். |
| கர்க்கடகம் | :- பெரியோர் சிநேகம், நன்மதிப்பு, பொருள்வரவு, வாகன லாபம். |
| சிங்கம் | :- கோபமிகுதி, காரிய சித்தி, உறவினரால் கவலை, புத்திக் குறைவு. |
| கன்னி | :- களஸ்திர சுகம், தேகசுகக் குறைவு, இனசனவிரோதம், திருடர் பயம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- மனக் கவலை, பண வரவு, தாழ்ந்த நிலை, விஷ பயம், புத்திரர் மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | :- ஏமாற்றப்படுதல், பகைவர் தொல்லை, உயர்ந்த நிலை, சௌபாக்கியம். |
| தனு | :- வீண் மனஸ்தாபம், குடும்ப சுகம், பிரயாச மிகுதி, காரிய வெற்றி. |
| மகரம் | :- நன்மதிப்பு, பெண்களால் நன்மை, இனசனக் கொண்டாட்டம், பிரயாணம். |
| கும்பம் | :- குடும்ப மகிழ்ச்சி, பொருள் வரவு, தனதானிய லாபம், புத்திர சுகம். |
| மீனம் | :- பயனற்ற பிரயாசம், வீண்பழி, பெண்களால் கெடுதல், கல்வி விருத்தி. |

## உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ராட்சி அமைச்சு

### வடக்கு கிழக்கு மாகாண சபை

### வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல. 1846 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் - 09

1. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பல தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கூறு விலையிடுவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 02 | BT/NECORD/RD/04 | கிரான் வடமுனை வீதி 16.5 கி.மீ. புனர்நிர்மாணம், மட்டக்களப்பு. | 1,500/- | M4 | 230,000/- |
| 05 | JF/NECORD/RD/01 | செம்பியன்பற்று, கட்டைக்காடு 12 கி.மீ. வீதி திருத்துதல், யாழ்ப்பாணம். | 1,500/- | M5 | 143,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறு விலையிடல் திறந்துள்ளது.

   I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ('ICTAD' டுடன் மேற்படி M 7 க்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

   IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

   VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4. இதன் தொடர்பாக பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கூறு விலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கூறுவிலையாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.

5. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கூறுவிலையிடுவோர் மேலும் தகவலை கூறுவிலைப் படிவத்தில் பெறமுடியும் என்பதுடன், கூறுவிலை ஆவணங்களை திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (NECORD), 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 026-27434-6, பக்ஸ்: 026-27401, ஈமெயில்: necord2slnet.lk.

6. கூறுவிலை ஆவணங்களை 26-02-2003 இலிருந்து 12-03-2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00மணி வரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

7. கூறுவிலையிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கூறுவிலையையும், கூறுவிலை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

8. பொறிவைத்த கூறுவிலைகள் தலைவர், திட்ட கேள்விச் சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 20-03-2003 மாலை 2.00மணிக்கு முன்பாக அனுப்பப்பட வேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கூறுவிலைகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறு விலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கூறுவிலை கூட்டமொன்று, இதன் தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 07.03.2003 அன்று மாலை 2.00 மணிக்கு நடைபெறும்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறு விலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**த.லங்காநேசன்**
**வடக்கு கிழக்கு சமுதாய புனருத்தாரண**
**அபிவிருத்தித் திட்ட கேள்விச் சபைத் தலைவர்,**
**140, மின்சார நிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-609)

# கொழும்புத் துறைமுகத்துக்கு அணுக் கழிவுகளுடன் கப்பல்

அணுக் கழிவுகளை ஏற்றிவந்த கப்பலொன்று கொழும்புத் துறைமுகம் வந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தூர கிழக்கிலிருந்து மத்திய கிழக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இத்தாலியில் பதிவுசெய்யப்பட்ட எல்.ரி. கிறாண்ட் என்ற கப்பலே அணுக் கழிவுகளுடன் கொழும்பு வந்தது.

பயணித்துக்கொண்டிருந்த கப்பலில் தீ ஏற்பட்டிருப்பதாகக் கூறி அது கொழும்புத் துறைமுகத்தினுள் பிரவேசித்தது. ஆனால், தீயணைப்புப் படையினர் சென்றுபார்த்தபோது கப்பலில் தீ ஏற்பட்டதற்கான எந்தத் தடயமும் காணப்படவில்லை.

ஆனால், கடுமையான துர்நாற்றத்துடன் கூடிய இரசாயனக் கழிவுகளை தீயணைப்புப் படையினர் அவதானித்தனர். இதனையடுத்து தீயணைப்புப் படையினர் இது தொடர்பான தகவல்களை துறைமுக அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

இந்தக் கப்பல் இரசாயனக் கழிவுகளுடன் சீனாவிலிருந்து கடும் பாதுகாப்புடன் துபாய் வழியாக ஈராக் சென்றுகொண்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

இக்கப்பலில் இரசாயனக் கழிவு இருப்பதாகக் கூறப்பட்டபோதும் இதனைக் கையாள்வதற்கான எந்த வசதிகளும் கொழும்புத் துறைமுகத்தில இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்புத் துறைமுகத்தில் இரசாயனக் கழிவுகளுடன் கப்பல் வந்துள்ள செய்தி கசிந்ததும் கொழும்பில் பதற்றம் நிலவியது. இதேவேளை, கொழும்புத் துறைமுகத்திலுள்ள இறங்குதுறை ஒன்றில் இரசாயனக் கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் இறக்கப்பட்டிருப்பதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

தீயணைப்புப்படை அதிகாரிகள் இக்கப்பலை துறைமுகத்தினுள் அனுமதிக்க வேண்டாமெனத் துறைமுக அதிகாரசபை அதிகாரிகளுக்குக் கூறியும், கப்பல் துறைமுகத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டது. மேற்படி கப்பலின் அதிகாரிகள் மற்றும் முகவர்கள், துறைமுக அதிகாரசபை அதிகாரிகளுடன் கொழும்பிலுள்ள நட்சத்திரக் ஹோட்டலொன்றில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நகரில் புனரமைக்கப்படும் காவலரண்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்கள் மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். நகரப் புறங்களில அமைந்துள்ள இராணுவ அரண்கள் அண்மைக் காலமாக மிகப்பலமான நிலையில் இராணுவத்தினரால் செப்பனிடப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(ரா)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# ஒஸ்ரின் - கருணா சந்திப்பு அடுத்த வார முற்பகுதியில்!

## யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிப் பேசுவர்

யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கான, அரச -புலிகள் தரப்பு மாதாந்தக் கலந்துரையாடல் அடுத்த வாரம் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

அடுத்தவாரம் முதல் மூன்று நாட்களுக்குள் - ஏதாவதொரு தினத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அரசதரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, புலிகளின் தரப்பில் கேணல் கருணா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பு நடைபெறும் திகதி, இடம் என்பன இன்னமும் இறுதியாகத் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. இதற்கான ஒழுங்குகளைக் கண்காணிப்புக் குழுவின் தலைவா ஜெனரல் றுாவ் ஹொவ்டே மேற்கொண்டிருக்கிறார்.

இந்தச் சந்திப்பின்போது மானிப்பாயில் பெண் போராளிகள் தாக்கப்பட்ட விவகாரம், புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவது தொடர்பான விவகாரம், கிளாலி முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் ஊடுருவிய சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டமை, முகமாலையில் பொலிஸார் ஒருவர் புலிகளால் சீருடையுடன் கைதானமை உட்படப் பல பிரச்சினைகள் குறித்து ஆராயப்படலாம் எனவும் தெரியவருகிறது.

(த)

# பிரபாவை நீதிமன்றில் ஆஜராக அழைப்பாணை

## பத்திரிகை மூலம் விடுக்க முடிவு

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்த்தனா, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனை எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு பணித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.வி.பி, சிஹல உறுமய, சிங்கள பாதுகாப்பு அமைப்பு ஆகியன நீதிமன்றில் சமர்ப்பித்த மனுவை விசாரணைக்கு எடுத்தபோது, நீதிபதி மேற கண்ட உத்தரவை வழங்கியுள்ளார்.

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்தது என்றும் -

அப்படியான இயக்கத்தோடு ஜனநாயகவாதியான ரணில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாது என்ற குற்றச்சாட்டை வைத்தே, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, எப்படி அழைப்பாணை அனுப்புவது என்பது குறித்துச்சர்ச்சை எழுந்தது.

இறுதியில் பத்திரிகைகள் மூலம் இந்த அழைப்பாணையை விடுவது என நீதிமன்றம் முடிவுசெய்தது.

# சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு அதிகாரி வட பகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அதிகாரி ஒருவர் வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட பகுதியின் தற்போதைய நிலவரம் குறித்தும், இப்பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் இவர் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த புதனன்று யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமையை அவதானித்துவிட்டு நேற்று முன்தினம் அவர் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

(க)

# ஹெலி கொள்வனவில் மோசடி பொறியியலாளர் விசாரணையில்

இலங்கை வான்படைக்கு 22 ஹெலகொப்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக வானபடையின் பொறியியலாளரான லால் பெரேராவை இரகசியப் பொலிஸார் கடந்த புதனன்று நான்கு மணி நேரம் விசாரணை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரகசியப் பொலிஸாரின் அழைப்பின்பேரில்- அவர் இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு வந்திருந்தார். இது சம்பந்தமாக மீண்டும் இவர் விசாரணை செய்யப்படலாம் என்று இரகசியப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த 22எம்ஐ. 24 ரக ஹெலிகொப்டர்களும் 1995 ஆம் ஆண்டுக்கும் 2001 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப பகுதிக்குள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன்போதே முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக முன்னாள் விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி விசாரிக்கப்படலாம் என்றும் இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேசிய வடிவமைப்புக் கல்லூரி மொறட்டுவவில் ஆரம்பம்

இலங்கையில் முதலாவது தேசிய வடிவமைப்புக் கல்லூரி மொறட்டுவவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இக்கல்லூரியில் அனைத்து வடிவமைப்புக்கள் குறித்தும் கற்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் என்று கல்லூரியின் அதிபர் சுவர்ணா ஒபேசேகர தெரிவித்தார்.

# ரயில்களின் வேகத்தை அதிகரிக்க அரசு உத்தரவு

ரயில்வே பாதை திருத்தப்படாததன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ரயில்களின் வேகக்கட்டுபாடு நேற்று முதல் நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இனிமேல் ரயில்கள் 55 கி.மீ. வேகத்தில் செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் திலக் மாரப்பன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்தை ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்பே - ரயில் பாதையினைத் திருத்துவதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும், தற்போது புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனறும் பொது முகாமையாளர் பிரியன் டீ சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, ரயில்சேவையில் உள்ள குறைபாடுகளை எடுத்துககூறி, அரசாங்கம் ரயில் சேவையைத் தனியார் மயப்படுத்தப்படுவதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டு வருவதாக நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் செயலாளர் விமல் வீரவன்ச கூறியமை தெரிந்ததே.

# அடுத்த மாதம் அகாஷி பிரபாகரனைச் சந்திப்பார்

ஜப்பான் நாட்டின் விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி அடுத்த மாத ஆரம்பத்தில் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை வரும் அவர்- வன்னிக்கும் விஜயம் செய்து, விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகின்றது. அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகது முன்னர் யசுசி அகாஷி இலங்கைக்கு விஜயம் செய்து, கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசவுள்ளதனை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டின்போது உறுதிப்படுத்தினார்.

(200)

# லஞ்ச ஊழல் ஆணையாளரை பதவி நீக்குவது பற்றி ஆராய நாடாளுமன்றக்குழு நியமனம்

லஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் கிங்ஸ்லி விக்கிரமசூரியவைப் பதவி நீக்குவது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றில் ஏழு பேர்கொண்ட விசேட நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 7 பேர்கொண்ட குழுவை நியமித்ததாகச் சபாநாயக்கர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

கிங்ஸ்லி விக்கிரமசூரியவைப் பதவி நீக்கம் செய்யவேண்டுமென, அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கா உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 77 பேர் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

லஞ்ச ஊழல் ஆணையாளர்- ஆணைககுழுவின் நம்பகத்தன்மையைப் பாதுகாக்கத் தவறிவிட்டார் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. நாடாளுமன்ற குழுவுக்கு அமைச்சர் திலக் மாரப்பன தலைமை வகிக்கிறார். இந்தக் குழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்.

## சங்கானைக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி

சங்கானைக் கல்விக் கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 25 ஆம், 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும்.

(118)

## கொழும்பில் நடைபெற்ற ஜே.வி.பியின் அரச எதிர்ப்புப் பேரணியிலிருந்து சில காட்சிகள்.........








# வட—கிழக்கு பிரதேச அபிவிருத்தி கிளிநொச்சியில் வேலைப்பட்டறை

(கிளிநொச்சி)

வட-கிழக்கில் மேற்கொள்ளப் படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபி விருத்தித் திட்டங்களை இனங்காணு வது எப்படி என்றும், இவ்வாறான செயறதிட்டங்கள் தொடர்பான தேவை மதிப்பீடுகளை எவ்வாறு செய்வது என் பது குறித்தும் ஆராயும் விசேட வேலைப்பட்டறை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சியில் உள்ள சிறான் அலுவலகத்தில் நடைபெற்ற இவ் விசேட வேலைப்பட்டறையில், வட-கிழக்கில் உள்ள அனைத்து மாவட் டங்களின் அரச அதிபர்களும் மற் றும் மாகாணசபை உயர் அதிகாரி கள் உட்பட பலர் பங்குபற்றினர்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகி யவற்றின் அதிகாரிகள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். இவ்வதி காரிகளே மேற்படி விடயங்கள் தொடர் பான தமது ஆலோசனைகளை இவ் வேலைப்பட்டறையில் சமர்ப்பித்த னர். (க,லி)

## அவைக்காற்று நிகழ்வு

வட இலங்கை சங்கீதசபையி னால் நடாத்தப்பட்ட ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக் கான இரண்டாம் சுற்று அவைக்காற்று நிகழ்வு இன்றும், நாளையும் பரதம் இந்து மகளிர் கல்லூரியிலும், சங் கீதம் - கந்தர்மடம் சைவப்பிர காச வித்தியாலயத்திலும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்.

## விஞ்ஞானசங்கப் போட்டிகள்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்தும் - விஞ்ஞான வினாவிடைக் கட்டுரைப்போட்டிகள் இன்று காலை 11 மணிக்கு வைத்தீஸ்வராக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் இந்தப் போட்டி ஏற்கனவே 10 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும், தற்போது நேரம் மாற்றப்பட்டுள்ள தாகவும் விஞ்ஞானச் சங்கம் அறி வித்துள்ளது. (ச)

## யாழ். ஆசிரியர் குழு மட்டக்களப்புக்குச் சென்றது

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு களில் விரிவுரையாற்றுவதற்கு, யாழ். குடாநாட்டிலிருந்து ஆசிரியர் குழு வொன்று மட்டக்களப்புக்குச் சென் றுள்ளது.

குடாநாட்டில் கணிதம், உயிரியல் போன்ற பாடங்கள் கற்பிக்கும் ஆசிரி யர்கள் அங்கு சென்றுள்ளனர்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



HAPPY BIRTHDAY

பெயர் : அ.சியானா

முகவரி: உயரப்புலம், ஆனைக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------

பெற்றார் ஒப்பம்


# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 27 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

'இறையவியல்' எனச் சாதாரணமாக அழைக்கப்படும் பங்கசு நோய் கால்விரல் இடைகளில் மாரிகாலங்களிலும், அதிக நேரம் தண்ணீரில் கால்வைத்து நிற்கும் சந்தர்ப்பங்களிலும் ஏற்படும். ஐதான கொண்டிஸ் (POTASSIUM PER MANGANATE) கரைசலில் சில நிமிடங்கள் பாதங் களை அமிழ்த்தி வைத்திருப்பதால் அல்லது இரண்டு மூன்று நிமிடங்கள் இந்தக் கரைசலால் தொடர்ச்சியாகப் பாதங்களையும், விரல் இடைக ளையும் கழுவிவிட்டு, நீரை ஒற்றி அகற்றிப் பாதங்களை உலர்த்தி விடு வதால் இது குணமடைகிறது. நகங்களின் ஓரங்களில் சீழ்பிடிப்பதுடன், நோவையும் ஏற்படுத்தும் பங்கசு நோய், கொண்டிஸ் பங்கசுநாசினியால் சுகப்படாது. இதற்கு TRINCTURE DAKTARIN எனப்படும் பூச்சு மருந்தை வைத்தியர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

### வழுக்கும் தரையும் நீரிழிவு நோயாளிகளும்

நீரிழிவு நோயாளிகள் வழுக்கி வீழ்ந்து, எலும்பு முறிவு ஏற்பட்டால் பெரும் இன்னலுக்கு ஆளாவர். இதனைத் தடுக்கப் பின்வரும் நடவடிக்கை களை மேற்கொள்ளவேண்டும். மழைகாலங்களில், நிலத்தில் வழுக்கும் தன்மைமிக்கதும், மினுக்கம் கொண்டதுமான கழுதைப்பாசி என்ற ஒரு வகைப்பாசி படர்வதுண்டு. நீரிழிவு நோயாளிகள் இப்பாசி படர்ந்துள்ள இடங் களில் நடமாடாது தவிர்த்தல் வேண்டும். சொட்டும் குழாயகள் இருந்தால் அவற்றைத் திருத்திவிடவேண்டும். குளியலறைத் தளம், வழுக்கும் தன்மை யுடன் இருந்தால், வெளிற்றும் (குளோரீன்) தூளை அல்லது சாம்பலைக் குளியலறைத் தளத்தில் பரப்பி, ஒரு இரவு முழுவதும் ஊறவிட்டுக் கழுவி, வழுக்கும் தன்மை அற்றதாகக் குளியலறையைப் பராமரிக்க வேண்டும். மலகூடத்தில் மலம் கழித்தபின் ( AFTER DEFECATION) சௌசம் (ABLUTION) செய்யும்போது கையில் ஊற்றப்படும் நீர், மலகூடத்தளத்தில் சிந்தாதவாறு, மலக்கோப்பையின் (SQUNITNG PAN) உள்ளே மாத்திரம் சொரியத்தக்கதாகக் கழுவி, மலகூடத் தரையை எப்பொழுதும் உலர்ந்த நிலையில் பேணவேண்டும். வீட்டினுள் மோட்டார் சைக்கிள்களை உருட்டி ஏற்றுவதற்காகச் சாய்வாக அமைக்கப்பட்டிருக்கும் தள ஓரங்களில் சறுக்கி வீழ்ந்து பலர் இடுப்பு எலும்பு உடைந்து, படுக்கை நோயாளிகளாகி அவ லப்படுகின்றனர். இந்தத் தளவோரச் சாய்வின் ஓரத்தை மண்ணினால் நிரப்பி, அதன் உயரத்தைக் குறைத்துவிட வேண்டும். பிளாஸ்டிக் செருப்பு களுடன் மாபிள் பதித்த தளங்கள், பொலிஷ் பூசிய தளங்கள் என்பவற்றில் நடக்கும்போதும், இத்தகைய தளங்களின்மேல் இருக்கும் பாதம் துடைப் பான்களில் பாதத்தைத் துடைக்கும்போதும் வழுக்கும். இத்தகைய அழுத்த மான தளங்கொண்ட உணவகங்களுட் பிரவேசிக்கும்போது அடிமேல் அடிவைத்து மெதுவாக நடக்கவேண்டும். குதி உயர்ந்த பாதணிகள் அணிவதையும் தவிர்க்கவேண்டும்.

### நீரிழிவைக் கூட்டும் சண்டை சச்சரவுகள்

நீரிழிவு நோயாளிகள் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு மன அமைதி இழக்கும் சந்தர்ப்பங்கள், நீரிழிவைக் கூட்டும். குடும்பத்தில் கணவன், மனைவி யிடையே சண்டை சச்சரவுகள் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. இவ்வாறு சண்டை ஏற்படும் சந்தர்ப்பங்களில் நிகழ்காலத்தில் மாத்திரம் சண்டையிட வேண்டும். அதாவது, இப்பொழுது இடம்பெறும் காரணத்துடன் இதற்கு முன் னர் சண்டை ஏற்பட்ட காரணங்களையும் சேர்த்து, இறந்தகாலத்துக்கும் சேர்த்துச் சண்டையிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

(தொடரும்)


நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: RATNAGOPALS இரத்தின கோபால்ஸ் (இணைந்த நிறுவனம்)

63,65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்னர்



531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்! வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயக னாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------

வயது: ------------------------------

முகவரி: ------------------------------



சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

# வார்த்தை விளையாட்டு -21

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | | 2 | | ■ | 3 |
| | ■ | | 4 | | வு |
| | 5 த | | | | ■ |
| | 6 | | 7 | | ■ |
| ■ | | 8 | ழு | | 9 |
| 10 | தி | ■ | | ■ | |

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

## இடமிருந்து வலம்

1. பாம்பு
4. நித்திரையில் தோன்றுவது
5. குற்றச்செயல்களைக் கண்டுபிடிக்க இதையே தேடுவார்கள்.
6. போலியான தோற்றம் கண்ணாடியிலும் பார்க்கலாம்.
8. இலங்கையின் தலைநகரம்
10. புத்தி



## மேலிருந்து கீழ்

1. ஒரு பறவை/சோறு
2. ஆண்டு
3. மரணம்
5. நெல் குற்றும்போது பெறப்படும் கழிவு (விலங்குகளுக்கு உணவு)
6. தங்குமிடம்
7. சேதம் அல்லது திருத்தம் செய்யவேண்டிய நிலை
9. காயம்

## வார்த்தை விளையாட்டு - 20 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சிம்பாப்வே
4. கலகம்
5. புலி
6. சாரதி
8. சனி
10. மடல், தபால்
12. சிலம்பு

**மேலிருந்து கீழ்**

1. சிறைச்சாலை
2. பாலம்
3. வேம்பு
8. சல்லி
9. கனி
11. புல்

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 26-02-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவு செய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 20

இல் பங்குப்றறி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு* -
**சி.சிவநேசன்**
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

*2ஆம் பரிசு* -
**து.சுஜீவன்**
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

*3ஆம் பரிசு* -
**செ.ஆண்டனியா**
கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## நிலாவின் கதை



இது முழுநிலா. பெரிய நிலா. அது மஞ்சள்நிறத் தட்டம்போல இருந் தது. நானும், அக்காவும் நிலாவைப் பார்த்தோம். பெரிய நிலா. பார்க்க அழகாக இருந்தது. இன்று பூரணை நாள். பூரணை நாளில் முழுமையான நிலாவைக் காணலாம் என்றார் அம்மா. நிலா வெளிச்சத்தில் நாங் கள் விளையாடினோம். அப்பொழுது அண்ணா அங்கு வந்தார். "நிலா பந்து போல உருண்டையா? அல்லது தட்டம போல வட்டமா?'' என்று அண்ணா கேட்டார்.

''நிலா பந்துபோல உருண்டை யானது'' என்றார் அக்கா.

"நிலா தட்டம்போல வட்டமானது'' என்றார் அண்ணா. இரண்டு பேரும் பலத்துக் கத்தினார்கள். உரத்துச் சொன் னார்கள்.

அம்மா தீர்ப்புக் கூறினார். எது சரி, எது பிழை என்று விளக்கினார். அம் மா ஒரு பந்தை எடுத்துக்கொண்டு வந்தார். தூரத்திலிருந்த மேசையின் மேல் வைத்தார். எங்களைப் பார்க் கும்படி சொன்னார். அது வட்டமாகத் தெரிந்தது. "உருண்டையான பொரு ளைத் தூரத்தில் பார்த்தால் வட்டமாகத் தெரியும்'' என்றார்.

சந்திரன் உருண்டையானது என்றார். வானத்திலே அழகான நட்சத்திரங்கள் தெரிந்தன. அவையும் உருண்டையானவை என்றார் அம்மா.

*கலாநிதி சபா.ஜெயராசா.*

## சாரணியத் தந்தை பேடன் பவெல் பிரபு




''என்னால் கூடுமானவரையில் எனது சமயத்திற்கும், தேசத்திற்கும் எனது கடமைகளைச் செய்யவும், எக்கா லத்திலும் பிறருக்கு உதவி புரியவும் சாரண விதிகளுக்கு அமைந்து, பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்''. இச்சாரணர் பிரமாணத்தை உலகிற்கு வழங்கிய சாரணியத் தந்தையின் வாழக்கை வரலாற்றைத் திரும்பிப் பார்ப் போம்.



இங்கிலாந்தில் லண்டன் நகரிலே 1857.02.22 இல் றொ பேர்ட் ஸ்டீவன்சன் சிமித் பேடன் பவெல் பிறந்தார். இவரது தந் தையார் ஒக்ஸ்போட் பல் கலைக்கழகத்தில் பேராசிரிய ராக இருந்த எ.ச்.ஜீ.பேடன் பவெல் ஆவார். பேடன் பவெல் பிரபுவிற்கு ஆறு சகோதரர்கள். இவருக்கு மூன்று வயதாக இருக்கும்பொழுது தந்தையார் இறந்துவிட்டார். தாயாரின் பாதுகாப்பில் ஏழு பிள்ளைகளும் வளர்ந்தார்கள்.

பிரபு கல்வி கற்கும் காலத்தில் சாட்டர் கவுஸ் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள குறுங்காட்டில் மிருகங்களைப் பின்தொடர்ந்து சென்று, அதன் வாழ்க்கை முறைகளை அவதானித்து வந்தார். இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தமது நான்கு சகோதரருடனும் பிரயாணங்கள் செய்து, பாசறை வாசங்கள் வாழ்ந்து, வெட்டவெளி வாழ்க்கையை வெகு இன்பமாகக் கழித்து வந்தார்.

றொபேர்ட் 19 ஆவது வயதில் கல்லூரியில் பட்டம் பெற்றார். உடனே இராணுவத்தில் சேர்ந்தார். குதிரைப்படையில் உபதளபதியாகப் பதவி பெற்று இந்தியாவிற்குச் சென்றார். இவரது குதிரைப்படை கிரிமின் யுத்தத்தில் பெரும் புகழ்பெற்றது. 26 ஆவது வயதில் தளபதியாகப் பதவியுயர்வு பெற்றார்.

1899 ஆம் ஆண்டில் "உபதளகர்த்தர்'' பதவிக்கு உயர்த்தப்பட்டார். தென்னாபிரிக்காவில் குழப்பங்கள் ஆரம்பித்தது. தென்னாபிரிக்காவில் உள்ள "மேப்கிங்'' யாருடைய கையில் இருக்கிறதோ அவரது கையிலேதான் தென்னாபிரிக்காவின் கடிவாளமும் இருக்கும் என்று சுதேசிகள் அடிக்கடி கூறுவதுண்டு. இதனைக் கைப்பற்ற பவெல் அனுப்பப்பட்டார். அதில் வெற்றியும் பெற்றார்.

1901 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இருந்து பெருவீரனாகத் தாய்நாடு திரும்பினார். இராணுவத்திற்காக "சாரணியத்திற்கான துணை'' என்னும் நூலை வடிவமைத்தார்.

இந்தியா, ஆபிரிக்கா ஆகிய இடங்களில், தான் அடைந்த அனுபவங்களைக் கொண்டு செயற்படத் தொடங்கினார். பெருந்தொகையான சிறுவர் நூல்களை எல்லாம் எடுத்துப் படித்தார். சாரணியக் கொள்கையை சிறிது சிறிதாகப் பேடன் பவெல் அபிவிருத்தி செய்தார். இந்த அபிவிருத்தி பலன் அளிக்குமா என்பதை பரிசோதிப்பதற்காக முதன்முதலாக 1907 ஆம் ஆண்டில் உலகம் கண்ட சாரணியச் சிறுவர் பாசறை வாசத்தை இங்கிலாந்துக் கால்வாயில் அமைந்துள்ள பிரவுன்ஸி தீவிலே, இருபது சாரணியச் சிறார்களுடன் நடாத்தினார்.

இப்பாசறை வாசம் பெரும் வெற்றியைச் சாரணியத் தந்தைக்கு அளித்தது. 6 பிரசுரங்களாக 1908 ஆம் ஆண்டு "இளைஞர் சாரணியம்'' என்னும் நூலை வெளியிட்டார். சித்திரங்களைத் அவரே தீட்டினார். உலகத்திலுள்ள சிறுவர்களுடைய ஒரு இயக்கமாகச் சாரணியம் வளரத் தொடங்கியது. பிரபு வருங்கால யுத்தங்களுக்குச் சிலரைப்பழக்கி விடுவதிலும் பார்க்க, வருங காலச் சந்ததியினரை உத்தமர்கள் ஆக்குவதற்குச் சாரணியப் பயிற்சியே சிறந்ததென உணர்ந்தார்.

சாரணியத்தை உலக சகோரத்துவ இயக்கமாக்குவதற்காக 1912 ஆம் ஆண்டில் உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள சாரணரைச் சந்திப்பதற்காக ஆரம்ப முயற்சியாக உலக பிரயா ணத்தை மேற்கொண்டார். முதலாவது உலக யுத்தம் வந்து முயற்சியைத் தடை செய்தது. யுத தம் முடிந்ததும் 1920 ஆம் ஆண்டு - முதல் உலக சாரணர் மேவனத்திற்காக, சர்வதேசத்துச் சாரணர்களும் ஒன்று கூடினர். இறுதி நாளான ஓகஸ்ட் 6 ஆம் திகதி பேடன் பவெல் "உலகப் பிரதம சாரணர்'' என்று பிரகடனம் செய்யப்பட்டார்.

தந்தை 80 ஆவது வயதில் ஆபிரிக்காவிற்குத் துணைவியாருடன் சென்றார். மிகவும் இயற்கை அழகு வாய்ந்த கெனியாவில் அவர்கள் மகிழ்வாக வாழ்ந்து வந்தனர். 1941-01-08 இல் அவர் இறைவனடி சேர்ந்தார்.

*இ.தில்லைவாசன், ஜனாதிபதி சாரணன்.*

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
சுந்தரலிங்கம் சுஜன்
கற்கும் பாடசாலை :-
யா/இந்து ஆரம்ப பாடசாலை.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டுத்துறை, ரீ.வீ.பார்த்தல்

முழுபெயர் :-
த. கோகிலவர்த்தனி
கற்கும் பாடசாலை :-
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வீ.பார்த்தல், வானொலி கேட்டல்.





முழுப்பெயர் :-
யோகநாதன் சுபராஸ்
கற்கும் பாடசாலை :-
யா/மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விஞ்ஞானம், பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:- அபினா அருள்நந்தி
கற்கும் பாடசாலை :-
யா/ உடுப்பிட்டி மகளிர்கல்லூரி
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டுப்பாடுதல்,
விளையாட்டுத்துறை.

முழுப்பெயர்:-
க.விஜயகாந்தன்
கற்கும் பாடசாலை :-
யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டுத்துறை.

முழுப்பெயர்:-
சி.மெல்கியஸ் மிலன்
கற்கும் பாடசாலை :-
யா/நெடுந்திவு றோ. க. மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

## சின்னச் சின்ன பொம்மை

சின்னச் சின்ன பொம்மை ஒன்று
என்னைப் பார்த்து சிரிக்கிறது.
கையைக் கையை ஆட்டி என்னை கிட்ட
வரவும் அழைக்கிறது.
(சின்னச் சின்ன)

கண்ணைக் கண்ணைக் காட்டுது
காலைத் தூக்கி நீட்டி மடக்கிக் காட்டுது
அக்கம் பக்கம் பார்க்குது
அழகாய்த் தலையை ஆட்டுது
(சின்னச் சின்ன)



"சா" "பா" என்று சுருதி போட்டு
பாட்டுப் பாடிக் காட்டுது
சரிகமபதநிச ~ சநிதபமகரிச
கையில் தாளம் போடுது
தா, தீ, தொம், நம்
காலால் நடனம் ஆடுது
தா தெய் தெய்த
தித் தெய் தெய்த
(சின்னச் சின்ன)



சுற்றிச் சுற்றி ஆடுகிறது
சுழன்று சுழன்று ஆடுகிறது
சோர்ந்து கீழே விழுகிறது
ஐயையோ! சோம்பிக்
கீழே கிடக்கிறதே.
தூக்கித் தோளில்
போடுவோம்.
(சின்னச் சின்ன)

~ லிங்கா

## பில் கேட்ஸின் வாரிசு ஈழத்துச் சிறுவன்

பிரான்ஸில் கல்வி கற்கும் 14 வயதான ஈழத்துச் சிறுவன் கணினித்துறையில் முதன்மை வாய்ந்த மைக்றோ சொவ்ற் நிறுவனத்தின் தயாரிப்புக்களில் தொழில்சார் பட்டம் பெற்று - உலகில் ஆகக்குறைந்த வயதில் இப்பட்டத்தைப் பெற்றவர் என்ற சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்.



பிரான்ஸில் பாரிஸ் நகருக்கு அண்மையில் வசிக்கும் - அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சிவப்பிரகாஷ் சந்திரகுமார் என்ற சிறுவனே, மைக்கிறோ சொவ்ற் நிறுவனத்தின் தலைவர் பில்கேட்ஸின் பாராட்டையும் சான்றிதழையும் பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

ஆறுவயதில் கணினியைக் கற்க ஆரம்பித்த இவர், வெகுவிரைவில் AZERTY என்ற நிகழ்ச்சித் தயாரிப்பு மொழியில் தனிக்கவனம் எடுத்து வந்திருந்தார்.

மைக்கிறோ சொவ்ற் நிறுவனத்தின் தொழில் சார் தகமைச் சான்றிதழையும் பெற்றுள்ள சிவப் பிரகாஸ் சந்திரகுமார் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து இயக்குவதற்குத் தேவையான, ஏனைய எட்டு வகையான சிறப்புச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில்சார் தகைமைச் சான்றிதழைப் பெறுவதற்காக கணினித்துறைசார் அறிஞர்களால் இரண்டு மணிநேரமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை வழங்கியிருந்தார். இவரை ஐரோப்பியப் பத்திரிகைகள் பல, பில்கேட்ஸின் வாரிசு" என வர்ணித்துள்ளன. இவரைப்போல நீங்களும் சாதனை படைக்கலாமே....

## புதிர்க் கணக்கு



வானத்தில் சில புறாக்கள் பறந்து கொண்டிருந்தன. ஒரு புறாவுக்கு முன்னால் இரண்டு புறாக்கள் பறந்து கொண்டிருந்தன. இன்னொரு புறாவுக்குப் பின்னால் இரண்டு
புறாக்கள் பறந்து கொண்டிருந்தன.
ஒரு புறாவுக்கு முன்னாலும் பின்னாலும் ஒவ்வொரு புறாக்கள் பறந்து கொண்டிருந்தன.
சரி இப்போது கண்டு பிடியுங்கள். மொத்தம் எத்தனை புறாக்கள் பறந்து கொண்டிருந்தன...?

விடை: 3 புறாக்கள்.

## விடுகதைகளும்

1. வாயிலே மலர்ந்து வாயிலே மறையும் பூ. அது என்ன?
2. தச்சன் செய்யாத பெட்டிதானாகத் திறந்து மூடுது. அவை என்ன?
3. மரத்திலே காய்க்காத பழம். அது என்ன?
4. ஓடுவார் ஆடுவார் கந்தப்பர், ஒற்றைக காலில் நிற்பார் கந்தப்பர். அது என்ன?
5. தம்பிக்கு எட்டும், அண்ணாவுக்கு எட்டாது. அது என்ன?
6. ஏறு ஏறு சங்கிலி, இறங்கு இறங்கு சங்கிலி, எட்டாத கொப்பெல்லாம் தொட்டு வா சங்கிலி. அது என்ன?

## விடைகளும்

1. சிரிப்பு
2. கண் இமை
3. ஐஸ்பழம்
4. கதவு
5. உதடு (சொண்டு)
6. அணில்



சிறீஸ்கந்தராஜா - பிரியா
தரம் 9
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உங்கள் கைவண்ணம்



இ.சுதாகரன்,
தரம் - 10
விக்கினேஸ்வராக்கல்லூரி.



ராஜினி ராதா
தரம் - 9
கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்.

## எனது பாடசாலை

☆ எனது பாடசாலையின் பெயர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
☆ எனது அதிபரின் பெயர் திரு.வே. ஞானகாந்தன்.
☆ எனது பாடசாலையில் 35 ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள்.
☆ எனது பாடசாலையில் 1 தொடக்கம் 5 வரையிலான வகுப்புக்கள் உள்ளன.
☆ எனது பாடசாலையில் நூலகம் உள்ளது.

து விதுஷன்
தரம் - 4
யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

..................... .....................
திகதி ஒப்பம்

..................... .....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அருமறை சோரும் அறிவிலான் செய்யும்*
*பெருமறை தானே தனக்கு.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## வருடமொன்றின் செய்தி...!

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றுடன் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது.

மிகுந்த எதிர்பார்ப்புகள் மத்தியிலும், இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்தவல்ல அரியதொரு சந்தர்ப்பம் என்ற ரீதியிலும், முதன்முதலாக போரிடும் இரண்டு தரப்பினதும் உயர் தலைவர்கள் கையெழுத்திட்ட ஆவணம் என்ற வகையிலும் - புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியிருந்ததை மறுக்க முடியாது.

இலங்கைத் தீவில் இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்து அரச பயங்கரவாதமும், இராணுவத் தாக்குதல்களும் - தமிழர் தாயகத்தைச் சுடுகாடாக்கியதோடு, தமிழ்மக்களின் வாழ்வியலையும் சிதைத்தழித்து வந்த வேளையிலும் -

ஒரு தேசிய இனத்துக்குரிய உரிமையைக் கோரிய தமிழரது விடுதலைப் போராட்டத்தை - இராணுவ அடக்குமுறைகளால் ஒடுக்கி, தமது அராஜகத்தை அரசாங்கமும், அரச படைகளும் கட்டவிழ்த்து விட்டபோதிலும் -

ஆயிரக்கணக்கான போராளிகளும், பொதுமக்களும் உயிரிழந்தபோதும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டபோதும், கண்மூடித்தனமான இராணுவத் தாக்குதல்களால் ஊரூராய்த் தமிழ்மக்கள் விரட்டியடிக்கப்பட்டபோதும் -

சமாதானத்தின் மீதும், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிதாகப் பதவியேற்ற அரசாங்கத்தின் மீதும், இணக்கத்துக்கு வாருங்கள் என அழைத்த சர்வதேசத்திற்கு மதிப்பளித்தும்- புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தமிழர் தரப்பு கௌரவித்து, கையெழுத்திட்டு அங்கீகாரம் செய்தது.

ஆனால் - அத்தனை நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும், அர்ப்பணிப்புடனும் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் - இன்று 365 நாட்களைக் கடந்துவிட்ட நிலையில் எதனைச் சாதித்திருக்கிறது? என்ற பெரும் வினா - தமிழர் தரப்பிலிருந்து எழும் துர்ப்பாக்கியநிலையை - அரசாங்கம் உருவாக்கிவிட்டிருக்கிறது.

ஆண்டாண்டு காலமாக நீடிக்கும் போரினால் - மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு - உறவிழந்து - உயிரிழந்து - அகதிவாழ்வில் அவலமுறும் லட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு - புதிய அரசாங்கத்தின் போக்கு - நிம்மதியையும், சுமுகவாழ்வையும் பெற்றுத்தரும் என்பதோடு - இதுவரை கண்ட ஒடுக்குமுறைகளுக்கு மனம் வருந்தி, தகுந்ததொரு நீதியான தீர்வைத் தரச் சிங்களச் சமூகம் முன்வரும் என்ற நம்பிக்கையையும் சுமந்தவர்களாகக் காத்திருந்த தமிழ்மக்களுக்கு - இந்த ஒரு வருடகாலம் தந்த அனுபவம் ஏமாற்றங்களினதும், துயரங்களினதும், விரக்தியினதும் பதிவாகவே ஆகிப்போயிருக்கிறது.

இடம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் - தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவும் - இழந்துவிட்ட வாழ்வை மீண்டும் பெற்றுவிடவும்- எதிர்பார்த்திருந்த உதவிகளோ, புனரமைப்பு- புனர்வாழ்வுத் திட்டங்களோ - இதுவரை மக்களை வந்தடைந்ததற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் சிறைப்பட்டுக் கிடக்கும் தமது குடிமனைகளுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டவர்களாகவும் -

கண்முன்னே பரந்து கிடக்கும் கடலில் உலாவுவதற்கும், கடற்படைக்கு அஞ்சி, அன்றாட சீவனோபாயத்திற்கே அல்லற்படவும் -

சோதனைக் கெடுபிடிகளும், வீதித்தடைகளும், அனுமதி கேட்கும் பயணப்பாதைகளும் தொடர - இளக்கத்தைச் காட்டச் சிரமப்படும் - பதிலாக தமது இறுக்கத்தையும், கடுமையையும் இன்னமும் வலுப்படுத்தும் - இராணுவச் சூழலிருந்து மீளமுடியாதவர்களாக அழுத்தப்பட்டும் -

இன்றும் ஏராளம் ஏராளமாய் - போர்க்காலத்தின் மறைந்துவிடாத ஆக்கிரமிப்பு, மேலாதிக்கம்பெற்றுவர துன்பத்திலாழும் மக்கள் - சமாதானத்தின் ஒரு சில கீற்றுக்களையேனும் அனுபவிக்க வாய்ப்பற்று வாடுகின்றனர்.

வட- கிழக்கில் ஏ-9 பாதைத் திறப்பையும் - அங்கொன்றும் இங்கொன்றுமான தளர்வுகளையும் மட்டுமே - ஒப்புக்குச் சப்பாணியாகக் காட்டியிருக்கும் ஒரு வருட காலமும் -

தெற்கில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பெறுதிகளைப் பெருவாரியாகப் வழங்கியிருப்பதுதான் தமிழ்மக்களிடையே இன்னமும் ஆதங்கத்தையும் பல சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றது.

குண்டுவெடிப்பு அச்சங்கள் கடந்துபோயும், பொருளாதாரம் நாளொரு தினமுமாக மேம்பட்டுச் செல்லவும், வீதித்தடைகள் அகற்றப்பட்டு போக்குவரத்துக்கள் சுதந்திரமாகவும் - போதாததற்கு வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதாயின் தெற்குக்கும் கவனம் செலுத்துங்கள் என்ற கோஷங்கள் வலுப்பெறவுமான சூழல் அங்கெல்லாம் உருவாகியிருப்பது ஒரு புறமிருக்க,

அதைவிடவும் - இந்த ஒரு வருட காலத்திற்குள்ளும் தமிழர் தரப்பு தனிநாட்டைப் பெறும் வளங்களைச் சேர்த்து விட்டதாகவும், இன்னும் என்னென்னவுள்ளதோ அத்தனையையும் தமிழர்கள் பெற்றுவிட்டதாகவும்- சிங்கள இனவாத சக்திகள் கூக்குரலிடவும் தெற்கு கண்டு வரும் மாற்றம் -

- புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மீதான அரசாங்கத்தின், சிங்கள அரசியல்வாதிகளின் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் கேள்விக்குரியதாக்கியே வீருகின்றது.

# 400 குடும்பங்களுக்கு நேற்று 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

## யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த நானூறு குடும்பங்களுக்கான மீள்குடியமர்வுக் கொடுப்



யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி கொடுப்பனவை வழங்குகிறார்

பனவு நேற்று யாழ்.செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கடந்தகால யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சாவகச்சேரிப் பிரதேசத்தில், மீளக்குடியமர்ந்த 400 குடும்பங்களுக்கு தலா 25,000 ரூபா கொடுப்பனவு காசோலையாக வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தின் திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அரச அதிபர் பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல், யூன்.எச்.எச்.சி.ஆர். பிரதிநிதி யோகன்னா மக்விக், நிக்கொட் அமைப்பின் பிரதிநிதி சாம்பசிவம், சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் கேதீஸ்வரன், பிரதம அலுவலக சர்வதேச ஆலோசகர் நாராயணசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, எம்.சிவாஜிலிங்கம் ஆகியோரும், கொடுப்பனவு பெறும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர், இந்த நிதியை வீண்விரயம் செய்யாமல் உங்களது அபிவிருத்திக்குப் பயன்படுத்துங்கள் எனத் தெரிவித்தார். முதல் 400 குடும்பங்களிற்கு ஒரு கோடி ரூபாவும், அடுத்து ஆயிரம் குடும்பங்களிற்கு இரண்டரை கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதம அலுவலகத்தின் ஆலோசகர் நாராயணசாமி, முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபாவும் பிறகு 75 ஆயிரம் ரூபாவும் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு லட்சம் ரூபாயில் எமது சமுதாயம் முன்னேற முடியாது. உங்களுடைய அபிவிருத்தி மூலம்தான் முன்னேற வேண்டும் எனக் கூறினார். (ரா.லி)

# 2 லட்சத்து 59 ஆயிரம் பேர் கடந்த வருடம் மீள்குடியமர்வு!

## புனர்வாழ்வு அமைச்சு தகவல்

(கொழும்பு)

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 2 லட்சத்து 59 ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியதாகப் புனர்வாழ்வு, அகதிகள் மீளக்குடியமர்வு விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோரே இவ்வாறு மீளக்குடியேறியுள்ளனர்.

மட்டக்களப்பு, புத்தளம், பொலனறுவ ஆகிய மாவட்டங்களில் இக்காலப் பகுதியில் மீளக் குடியமர்ந்த பொதுமக்கள் தொடர்பான விபரங்கள் தற்போது திரட்டப்பட்டுவருகின்றன.

இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்கள் தொடர்பான விபரங்களைப் புனர்வாழ்வு அமைச்சு - யு.என்.எச்.சி.ஆருடன் இணைந்து திரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கமநல நிலையங்களிலும் தேசிய சமாதான நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு நிறைவையொட்டி, தேசிய சமாதான நிகழ்வு, யாழ். மாவட்டத்தின் சகல கமநல சேவை நிலையங்களிலும் இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் மேற்கொண்டுள்ளார்.

இன்று மாலை 6.50 மணிக்கு குடாநாட்டிலுள்ள கமநல சேவை நிலையங்களிலும் சமாதான விளக்கேற்றல் நடைபெறும். தொடர்ந்து சமாதானத்தையொட்டி சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் அந்தந்தக் கமநல நிலையங்களிலும் உள்ள விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், விவசாயிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமயப் பெரியார்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# தொழில் முயற்சிகளுக்கு சுவீடன் அரசு உதவி!

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள தொழில் முயற்சிகளுக்கு சுவீடன் அரசாங்கம் 11 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இதற்கான உடன்படிக்கை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்துறைத் திட்டங்களுக்கு சுவீடன் அரசாங்கம் இந்த உதவிகளை வழங்கவுள்ளது. தொழிநுட்ப உதவிகளுடன் சுவீடன் இந்தத் திட்டங்களை மேற்பார்வையும் செய்யும் எனத் தெரியவருகின்றது.

உணவு, விவசாய மற்றும் மீன்பிடித் துறைகளிலேயே சுவீடனின் இந்த உதவி பயன்படுத்தப்படவுள்ளது. கொழும்பில் நடந்த கூட்டத்தில் இதற்கான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தொழில் துறைகளுக்கு உதவுவதற்காக ஒன்பது கோடி ரூபாவையும் சுவீடன் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவருக்கு அழகியற்கல்விப் போட்டி

## கல்வியியற் கல்லூரி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் அழகியற்கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் 'அழகெழல்' எனும் போட்டி நிகழ்வினை யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியில் நுண்கலை மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதில் சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகள் மார்ச் மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளன.

சித்திரக்கலை தரம் 4, 5 மாணவர்கள் - 'எனது அன்புப் பெற்றோர்' அல்லது 'அழகிய கிராமம்' என்ற தலைப்பிலும், தரம் 6, 7, 8 மாணவர்கள் - 'வழிகாட்டும் ஆசான்' அல்லது 'சுற்றுலா மகிழ்ச்சி' என்ற தலைப்புக்களில் - கற்பனைப்பட ஆக்கம் அல்லது ஒட்டுச் சித்திரமும் - தரம் 9, 10 மற்றும் 11, 12, 13 ஆகிய பிரிவுகளுக்குக் கருத்து வெளிப்பாடு தொடர்பான தலைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர தரம் 4, 5 மாணவர்களுக்கு மட்டும் இசை, நாடகம், நடனம் ஆகிய போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் - 'அழகெழல்' நுண்கலை நிகழ்ச்சித்திட்டம், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி, கோப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

# பொலிஸார் ஒருவர் புலிகளால் கைது!

முகமாலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சீருடையுடன் நுழைந்த பொலிஸார் ஒருவர் புலிகளால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சீருடையுடன் அத்துமீறிப் பிரவேசித்த பொலிஸார் ஒருவரைத் தாம் கைதுசெய்து தமிழீழக் காவல்துறையிடம் ஒப்படைத்ததாகப் புலிகள் கூறியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

# சாவகச்சேரிப் பகுதி ஆலயத்தில் ஐம்பொன் விக்கிரகங்கள் திருட்டு

சாவகச்சேரி சித்திவிநாயகர் ஆலயத்தில் ஐம்பொன்னாலான ஐந்து விக்கிரகங்கள் கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் எழுந்தருளி விக்கிரகங்களான பிள்ளையார், முருகன், வள்ளி, தெய்வயானை, சண்டேஸ்வரர் ஆகிய ஐம்பொன் விக்கிரகங்களே திருடப்பட்டுள்ளன.

தினமும் இருவேளைப் பூசை நடைபெற்றுவந்த இந்த ஆலயத்தில் காலைப்பூசை செய்வதற்காகப் பூசகர் ஆலயத்திற்கு சென்றவேளை, ஆலயக் கதவு உடைக்கப்பட்டு விக்கிரகங்கள் காணாமல்போனமை கண்டுபிடிக்கப்பட்டது. (118)

# உலக மக்களின் விருப்புக்களை புறந்தள்ளும் ஜனாதிபதி புஷ்ஷின் அராஜகத்தனமான ஆட்சி

கடந்த வாரத்தின் இறுதிப்பகுதி முழுவதும் ஈராக் விவகாரத்தில் அமெரிக்க - பிரித்தானிய அரசுகள் இரண்டும் முன்னெடுக்கும் போர் அணுகுமுறையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடந்து முடிந்தன. ஏறக் குறைய உலகத்தின் முழுப்பகுதி யிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட நகரங்களில் 60 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இவற்றில் கலந்து




மேற்கு ஜேர்மனியில் நேட்டோ விமானம் தளத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்

கொண்டனர். அமெரிக்காவின் ஜனாதிபதியானவரும், உலகத்தின் முதல் மனிதன் என்று கருதப்படுபவருமான வில்லியம் புஷ்ஷை 'கசாப்புக் கடைக் காரன்', 'உலகத்தின் புற்று நோயாளி' என்றும் கேவலப்படுத்தும் நிலைக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்




ஐரோப்பிய மக்கள் ஈராக்குக்கு ஆதரவாக நடத்திய பேரணி

தமது உணர்வுகளை வெளியிட்டனர். **"Don't Attack Iraq"** என்ற வாசகத்தைச் சிவப்பு எழுத்துக்களால் பொறித்து மக்கள் ஊர்வலத்தில் தாங்கிச்செல்லும் காட்சி மக்களின் வெறுப்புக்களைத் தெளிவாகக்காட்டுகின்றது. முழு உலகத்திலிருந்தும் மக்கள் ஈராக் மீதான போரை எதிர்க்கின்றனர். ஆனால், வில்லியம் புஷ்ஷும் . அவரது ஆதரவாளரான ரொனி பிளயரும் மட்டுமே போரை விரும்புகின்றனர்.

ஈராக் மீதான போருக்கான அலை - அமெரிக்க எதிர்ப்புவாதத்தினைப் பெரியளவில் கிளறியுள்ளது. இது அரசியற் போட்டிக்கான அணுகுமுறை என்றோ அல்லது அதிகார அரசியலுக்கான போராட்டம் என்றோ கருதிவிட முடியாது. அப்படியாயின், போருக்கு எதிரான அரசியலாகவே மீள் உருவாக்கம் செய்து கொள்ளலாம். அத்தகைய அரசியலில் மக்களின் எண்ணங்களைத் தாராண்மை ஜனநாயக முறைபபடி அல்லது பெரும்பான்மை ஜனநாயக முறைப்படி எவ்வாறு அமைந்துள்ளது என்பதனைப் பருமட்டாக அவதானிப்பதன் வாயிலாக, அதன் பயன்பாட்டின் சார்புத் தன்மையை அளவீடு செய்துகொள்ளலாம்.

ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனியில் 81 சதவீதமான மக்கள் போரை எதிர்க்கும் பட்டியலில் தமது வாக்குகளைப் பதிவுசெய்துள ளனர். இது இயல்பாகவே அமெரிக்க எதிர்ப்புவாதத்தால் தூண்டப்பட்ட கடந்த கால அரசியலின் விளைவு என யாரும் எடுத்த வீச்சில் கூறிவிடலாம்.

ஆனால், ஜேர்மனிய மக்கள் கூறும் காரணங்கள் வேறு விதமாக உள்ளன. முதல் இரண்டு உலக யுத்தங்களிலும் ஐரோப்பியர்கள் அடைந்த நெருக்கடியும், துன்பமும் மீளவும் உலகத்தின் வேறு ஓர் இனத்துக்கு உரியதாகவோ அல்லது வேறு கண்டத்து மக்களுக்கு உரியதாகவோ ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன், உலகம் அடைந்துள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்குக் கடினப்படும்போது மேலும துயரத்தை எதிர்கொள்ள முடியாது என்பதுமே அவர்களது வாதமாக உள்ளது.

பிரான்ஸ் நாட்டு மக்களில் 82 சதவீமானவர்கள் போரை நிராகரித்துத் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். துருக்கியரில் 87 சதவீதமான மக்கள் போரை அடியோடு வெறுப்பதுடன், அமெரிக்கப் படைகள் துருக்கியப் பிரதேசத்தைப் போருக்காகப் பயன்படுத்துவதனையும் எதிர்க்கின்றனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செக் குடியரசு மக்களில் 75 சதவீதமானவர்கள் போரை வெறுக்கின்றனர். அமெரிக்க ஆதரவும் செல்வாக்கும் உடைய போலந்து நாட்டில் 94 சதவீதமான மக்கள் ஈராக மீது போர் தொடுக்க வேண்டாமெனக் கூறிவருகின்றனர்.

அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இத்தாலியின் தலைநகரான ரோமில் மட்டும் பத்து லட்சம் மக்கள பங்கெடுத்துக் கொண்டனர். மற்றும் பர்சிலோனாவில் 13 லட்சம் மக்களும், மற்றிச்சில் 20 லட்சம் மக்களும், நியூயோர்க்கில் 2.5 லட்சம் மக்களும், லண்டனில் 5 லட்சம் மக்களும் கலந்துகொண்டனர். மக்களின் அதிகமான பங்களிப்பினை இப்போராட்டங்கள் வெளிப்படுத்தியுள்ளன. மக்கள் தங்கள் அரசியற் பங்களிப்பினை வெளிப்படுத்தும் சாதனமாக ஆர்ப்பாட்டத்தை என்றுமே கருதுகின்றனர்.

ஏனெனில், 1789 ஆம் ஆண்டு பிரான்ஸ் மக்கள் 'சுதந்திரம்', 'சமத்துவம்', 'சகோதரத்துவம்' என்ற கோஷங்களை அல்லது பிரகடனங்களை வெளிப்படுத்திக் கொண்டு, வீதியில் போராட்டம் நடாத்தினர். அவர்கள் அன்று நடாத்திய போராட்டத்தின் விளைவாகவே புதிய அத்தியாயம் ஐரோப்பாவிலும், பிற கண்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டது. அதே போன்ற உணர்வைத்தான் சுதந்திரப் போராட்டங்களின்போதும் ஆசிய - ஆபிரிக்கக் கண்டத்து மக்கள் அமெரிக்கரைப் போன்று பின்பற்றினர். அமெரிக்க மக்களே ஆங்கிலேய ஆக்கிரமிப்புக்கு எதிராக முதன்முதல் தேசிய விடுதலைப் போராட்டத்தினை மேற்கொண்டனர். அவாகளைப் பின்பற்றியே பிற கண்டத்து மக்கள் - ஆங்கிலேய ஆக்கிரமிப்பை எதிர்க்க ஆரம்பித்தனர். அல்லது கூட்டாகப் போராடி வெற்றி பெறலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

அத்தகைய போராட்டங்களுடன் ஒப்பீடு செய்யும்போது, மக்கள் தற்போது செய்யும் போராட்டம் வலு மிக்கதாக இருந்தபோதும் - எத்தகைய விளைவையோ, எதிரொலிப்புக்களையோ உடனடியாக ஏற்படுத்தவில்லை. அமெரிக்கப் புரட்சிக்கும், பிரான்சியப் புரட்சிக்கும் மக்களின் வலு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அமைந்ததுடன், அராஜகம் தோற்கடிக்கப்பட்டு மக்கள் புரட்சி வெற்றி பெற்றது. அன்று காணப்பட்ட கருத்தியல் வளர்ச்சியின்மையும், தகவற்துறை முன்னேற்றமின்மையும் முழு உலகத்தையும் ஒன்றிணைக்கத் தவறியபோதும், மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நல்ல விளைவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் கிடைத்ததெனக் கூறலாம்.

ஜனநாயம் என்ற கோஷம் கிரேக்கத்தின் சிந்தனை வரிசையில் ஆரம்பிக்கப்பட்டபோதும், அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் யதார்த்த நோக்கினால் நவீன வடிவம் பெற்றது. அன்றிலிருந்து ஜனநாயகத்தின் நவீன தந்தையாக ஆபிரகாம் லிங்கன், அமெரிக்க மக்களும் உச்சரிக்கப்பட்டவராக விளங்கினார். கறுப்பர்களுக்கு உரிமை வழங்கப்பட்டதற்காகப் பல அமெரிக்க ஜனாதிபதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதையும் மறுத்து விடமுடியாது. ஆனால், ஆபிரகாம் லிங்கனும் கறுப்பினத்தவருக்கு உரிமை கொடுத்து அமெரிக்காவை ஐக்கியமான தேசமாக உருவாக்கியதுடன், தென்மாநிலத்தின் உயர் வர்க்கத்தினரை அழித்தொழிப்பதில் வெற்றி கண்டார். அவ்வாறு ஆபிரகாம் லிங்கன் செய்யத் தவறியிருந்தால் அமெரிக்கா இரண்டு துண்டுகளாக 1860 களில் பிரிந்திருக்கும். அத்தகைய நெருக்கடியைச் சமாளிக்கப் பிறந்ததுவே நவீன தாராள ஜனநாயகம். அந்த ஜனநாயகத்தின் பூட்டன் மகன்தான் தற்போதைய ஜனாதிபதி வில்லியம் புஷ். அவரது ஜனநாயகம் தேர்தல் காலத்தில் உலக மக்களால் கண்டும் ரசிக்கவும் முடிந்திருக்கும்.

மிகப் பிந்திய தகவல் ஒன்றை வில்லியம் புஷ் வெளியிட்டிருந்தார். மக்களின் உரிமைகளையும், போராட்ட உணர்வையும் - தான் மதிப்பதாகவும் - மக்களுக்கு போராடுவதற்குச் சுதந்திரம் உண்டென்றும், அதனை அமெரிக்க ஜனநாயகம் ஏற்றுக்கொள்ளும் என்று கூறியுள்ளதுடன், ஈராக் மீதான போர் தவிர்க்க முடியாதது என்றும் குறிப்பிட்டிருந்தார். போரிலிருந்து தப்பிக் கொள்ளமுடியாது என்பதுடன், சதாம் ஆபத்து மிக்கவர் என்பதை உலகம் உணரும் காலம் வெகுவிரைவில் ஏற்படும் என்றார்.

ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளும் புஷ் - ஈராக்குக்கு எதிரான உணர்வினை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். அவர் பேசும் ஜனநாயகம் வெளிப்பாடுகளுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. விளைவுகள் எதனையும் கொண்டதாக இல்லை.

அமெரிக்க ஜனநாயகம் அதுவாகவே தென்படுகின்றது. உலகத்தின் முதல்தர ஜனநாயக நாடு, மிகப் பெரிய ஜனநாயக அரசு. ஆட்சி மாற்றமும், அதிகாரப் பரப்புகையும் ஜனநாயக மார்க்கம் ஊடாகவே நிகழுகின்ற உயரிய அரசியல் கலாசாரத்தைப் பேணுகின்ற நாடு அமெரிக்கா. அந்த நாட்டின் ஜனாதிபதி பேசும் ஜனநாயகமும், நடைமுறைப்படுத்தும் அராஜகமும் ஒன்றாகவே உள்ளது. ஏனெனில், மக்கள் விருப்புக்களை அல்லது அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொறுப்புணர்வுடைய அரசாங்கத்தை அமைப்பதுதான் ஜனநாயக விழுமியத்தின் காத்திரமான பங்களிப்பாகும்.

மக்களால் மக்களுக்காக மக்களே ஏற்படுத்திக் கொள்ளும் ஆட்சி முறை ஜனநாயகம் என அமெரிக்க எஜமானர்கள் முன்கூட்டியே கூறிவிட்டாாகள். ஆனால், அத்தகைய கருத்தியல் உருவாக்கம் அவர்களுக குரியதா என்பதே அவர்களை நோக்கிய கேள்வியாகும்.

அமெரிக்கர்களைப் பொறுத்த வரை இது ஆங்கிலேயர்களுக்கும் பொருத்தமானதாகும். ஏனெனில், ஆங்கில எஜமானர்கள் பரப்பிய ஜனநாயகச் சிந்தனையே ஆசியக் கண்டததில் அநேக நாடுகளில் காணப் படுகின்றது. ஆனால் -அமெரிக்கரோ,




ஜகார்த்தா நகரில் நடந்த அமெரிக்க எதிர்ப்புப் பேரணி

ஆங்கிலேயரோ - தமது நாடுகளிலோ அல்லது தமது ஆட்சியதிகாரக் கடத்துகையிலோ அவற்றை பூரணமாகக் கடைப்பிடிப்பதில்லை. குறிப்பாகத் தமது நாட்டுக்கு ஒரு மாதிரியும, பிறநாடுகள் மீதான நடைமுறையில் இன்னோர் மாதிரியும் என்பதை அவர்களது அரசியல் கலாசாரத்தில் காண முடிகின்றது.

உலகத்தின் பாதுகாப்பையும் ஆளுகைப் பொறுப்பையும் கொண்டுள்ள அமெரிக்க எஜமானர்கள் அமெரிக்காவில் பேசும் ஜனநாயகம் ஒன்று, பிறநாடுகள் மீது பேசப்படும் ஜனநாயகம் இன்னொன்றாகும். சட்டம், இறைமை, அடிப்படை உரிமை என்றெல்லாம் அரசியல் யாப்பு மரபுக்குள் நின்று உரைக்கும் ஆட்சியாளர்களில் முன்னோடிகள் அமெரிக்க - ஆங்கில ஆட்சியாளர்கள் தான். ஆனால், அவர்கள் பின்பற்றும் ஈராக் மீதான கொள்கையில் எத்தகைய நியாயப்பாடு நிலவுகின்றது?

அமெரிக்க மக்கள் இறைமை உடையவர்கள் என்பதைப் போனறு, ஈராக்கிய மக்களும் இறைமை உடையவர்கள் என்பது நியாயமானதுதான். ஏன் அதனை அமெரிக்க ஆட்சியாளர்கள் ஏற்க மறுக்கின்றனர்? இறைமை அமெரிக்க மக்களுக்கோ, அமெரிக்காவுக்கோ மட்டுமுரியதல்ல. அடிப்படை உரிமையை உச்சரிக்கும் அமெரிக்கா 1991 ஆம் ஆண்டு பக்தாத் நகரின் மீது வீசப்பட்ட குண்டில் கொல்லப்பட்ட 400 இற்கும் மேறபட்ட ஈராக்கிய மக்களுக்கு என்ன பதில் கூறியது? அந்த மக்களின் அடிப்படைக் காப்புரிமை எங்கே குழிதோண்டிப் புதைக்கப்பட்டது?. இது மட்டுமல்ல சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஈராக்கியப்படைகள் - ஆப்கானிஸ்தானின் தலிபான்களின் அடிப்படை உரிமைகள் எல்லாம் அமெரிக்காவால் பாதுகாக்கப்பட்டதா? அங்கு பின்பற்றப்பட்டது ஜனநாயகத்தின் முடிவு தானா? என்ற கேள்விகளுக்கு - அமெரிக்க ஆட்சியாளர்களால் பதிலளிக்க முடியாது. அமெரிக்க ஆட்சியாளர்கள் அல்லது மேற்கு உலகத்தவர்கள் கீழைத்தேச மக்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்தும் சொற்பதங்களாக ஜனநாயகத்தை, அடிப்படை உரிமையைக் கருதலாம். அவ்வாறு கருதிப் பயன்படுத்தலாமே அன்றி வேறு எதனையும் யதார்த்தத்தில் உணரமுடியாது.

**Media Freedom** பற்றி தொண்டை கிழியக் கத்தும் அமெரிக்க மண்ணில் ஒரு காலப் பகுதியில் தலிபான்களைப் பற்றி எழுதினால் சிறைத்தண்டனை உயர்ந்தபட்சக் குற்றமாக விளங்குவது போன்று, ஈராக் தொடர்பான அமெரிக்க எதிர்ப்பினைக்காட்டும் தகவல்கள் - எழுதப்பட்டாலும் வெளியிடுவது, பிரசுரிப்பது தடை செய்யப்பட்டதாக மாறியுள்ளது.

இதுவே அமெரிக்கச் சுதந்திரத்தின் உச்சமான பயன்பாடாகும். இதன் கீழ்தான் அமெரிக்க ஜனநாயகத்தைப் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம்.

அமெரிக்க ஜனநாயகத்திற்குப் பதிலாக அமெரிக்க அராஜகம் நிலவுகின்ற ஆட்சிமுறைமை எனச் சித்திரிப்பது பொருத்தமானதாக அமையும். அமெரிக்காவின் அராஜகத்தின் மிகப்பலமான காலப்பகுதி தற்போதைய ஆட்சிக்காலப் பகுதி என்ப

கே.ரீ.கணேசலிங்கம்

தனை மறுக்கமுடியாது. மக்களின் விருப்புக்களைப் புறந்தளளி விட்டு, ஆட்சியில் உரிமைகளை அனுபவிக்க முயல்வதென்பது அராஜகத்தைத் தவிர வேறு எதிலும் காணமுடியாது. முதலாம், இரணடாம் உலக யுத்தத்தின்போது மிகக் கொடியவர்களாகக் காட்டப்பட்ட முசோலினி, ஹிட்லர், போன்றோருடன் ஒப்பீடு செய்யக்கூடியவராக விளங்குகிறார் வில்லியம் புஷ். மக்களின் விருப்புக்கு அப்பால் அரசியலில் செல்வாக்குப் பெறும் ஒருவராகவே புஷ்ஷைக் காணமுடிகினறது.

வளைகுடாப் பகுதியில் குவிந்துள்ள எண்ணெய் வளத்தினைச் சூறையாடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு போரைத் தயார்படுத்தும் வில்லியம் புஷ் - அதற்குப் பல விளக்கங்களை, வியாக்கியானங்களையும் போலியாகக் கூறிக் கொள்வதும் - அவற்றுக்கு நியாயம் கற்பிக்க முயல்வதும் வேடிக்கையானதாக அமைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி பெண் விடயங்களில் பெயரிழக்க, இந்நாள் ஜனாதிபதி போர்ப் பித்தராகத் திகழுகின்ற அயோக்கியத்தனமான அரசியல் கலாசாரம் அமெரிக்காவால் கட்டி வளர்க்கப்படுகின்றது.




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## அந்த நாள் ஞாபகம்...

இன்று சனிக்கிழமை G.M.T நேரப்படி 12.30 மணிக்கு A பிரிவில் பரபரப்பான போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது. பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து அணிகள், தென்னாபிரிக்காவின் NEWLANDS, CAPETOWN மைதானத்தில் மிகவும் ஒரு சிறந்த போட்டியை கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தர இருக்கின்றன.

இந்த மைதானத்தை எடுத்துக் கொண்டால், பெரும்பாலும் முதலில் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்றும் பின்பு துடுப்பாட்ட வீரர்களுக்கு RUN குவிக்கக்கூடிய வசதியைக் கொண்டது என்றும் கிரிக்கெட் வர்ணனையாளர்களால் கூறப்படுகின்றது.


வெற்றிக்களிப்பு 92 இல்.

அண்மையில் - நமீபியாவுக்கு எதிரான போட்டியில் ROCKET வேகத்தில் சொஹெய்ப் அக்தார் வீசிய


நிக் நைட் - விளாசல்.

பந்து இங்கிலாந்து அணியின் வீரர்களுக்கு ஒரு வகையான பேதியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், கனவான்கள் ஆகிய இங்கிலாந்து அணி வீரர்கள், பாகிஸ்தானை வென்றால் மட்டுமே SUPER SIX இற்குள் நுழைவதற்கான வாய்ப்பினை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

இம்முறை வேகப்பந்து வீச்சாளர்கள், தனியே பந்தின் வேகத்தை மட்டும் அதிகரிக்காமல் இடையிடையே சில குளிசைகள் (BOUNCERS) விடுவதனால் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இங்கிலாந்து அணியை எடுத்துக்கொண்டால் அணித் தலைவர் நஸார் ஹுசைனிற்கு ஒரு சலிப்புத் தன்மை காணப்படுகின்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் வேகம் போதாது. மார்கஸ் டிரெஸ் கொதிக்கினுடைய அதிரடி ஆட்டம் இன்று தேவை. அணியில் உள்ள பந்து வீச்சாளர்கள் பந்துவீச்சின் வேகத்தை அதிகரிக்க வேண்டும். மூத்த ஆட்டக்காரர்களாகிய நிக் நைட், அலெக் ஸ்ரூவர்ட் ஆகியோர் Batting இல் கைகொடுக்க வேண்டும். இன்று பெரும்பாலும் இங்கிலாந்து அணித் தலைவரால்தான் அவருடைய அணியின் வெற்றி நிச்சயிக்கப்படும்.


பாகிஸ்தானின் வெற்றிகரமான அணித்தலைவராக விளங்கிய இம்ரான் கான்.

அடுத்து பாகிஸ்தான் அணியின் தலைவர், ஒரு சர்ச்சைக்குரிய தலைவராகவே காணப்படுகின்றார். அவர், அக்தாருக்குப் போட்டியாகத் தானும் பந்து வீச முயன்றால் இனறு எதிரணிக்குக் கொண்டாட்டந்தான்.

இன்று அன்வருடைய ஆரம்ப ஆட்டம் மிகவும் முக்கிய தேவை. இந்த அணியின் பலம் வாய்ந்த தூண்களான வாசிம் அக்ரம், இன்சமாம் உல் ஹக் ஆகிய இருவரும் பல உலகக் கோப்பைப் போட்டிகளில் களம் கண்டவர்கள். அதிலே அக்ரம், 1992 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற பென்சன் அன்ட் ஹெட்ஜஸ் உலகக் கோப்பையை பாகிஸ்தான் அணி இங்கிலாந்து அணியைச் சுருட்டி வெற்றிபெறக் காரணமாகியவர். இன்று அவர் அணியிலிருப்பது மிகவும் பலமாக இருக்கிறது.

இன்றைய போட்டியின் மத்தியஸ்தர்களாக

R.E. Koertzen (Ground), B.G. Jerling (Ground), S.A. Bucknor (TV), S. Wadvalla (4th) ஆகியோர் கடமையாற்றுகிறார்கள்.

போட்டி நடுவராக M.J. Procter கடமையாற்றுகிறார். இன்று பாகிஸ்தான் தோற்றால் அடுத்து வருகின்ற போட்டி பெரும் சவாலாகவே அமையும். சவாலை சமாளிப்பார்களா?

## எப்படி, எதுவரை....!

### தென்னாபிரிக்கா



*அணித் தலைவர்* - ஷோண் பொல்லொக்.

*பயிற்றுநர்* - எரிக் சிமன்ஸ்.

*குழு B* - நியூசிலாந்து, மேற்கிந்தியா, இலங்கை, பங்களாதேஷ், கென்யா, கனடா.

*பலம்* - தமது தாயகத்தில் விளையாடுவது ஒரு பலம். அதற்கு மேலாக எல்லாத்துறையிலும் வல்லவர்களைக் கொண்ட அணி. கிப்ஸ் தலைமையிலான துடுப்பாட்ட வரிசை. புதிய பற்றுடன் ஷோண் பொல்லொக். உலகின் அதிசிறந்த ALL ROUNDER ஜக் கலிஸ். மிகக் கூர்மையான களத்தடுப்பு வீரர்கள்.

*பலவீனம்* - துரதிர்ஷ்டவசமாக அவுஸ்திரேலிய அணிக்கு அடுத்த நிலையிலேயே இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவை இவர்கள் எவ்வாறு கையாளப் போகிறார்கள். எனினும் ஒரு முக்கியமான விடயம், மத்திய வரிசையில் துடுப்பாட்டத்தில் சில தளம்பல்கள் உண்டு. தெரிவு முறையில் தவிர்க்க முடியாத, நியாயப்படுத்தப்படக்கூடிய அரசியல் தலையீடு இருப்பதும் ஒரு பலவீனம்.

*முக்கிய நபர்* - ஜக் கலிஸ் - இவரது தரத்தில் உலகில் மிகக் குறைந்தளவு வீரர்களே உள்ளனர். அதிசிறந்த ALL ROUNDER. தேவையான போது Specialist துடுப்பாட்ட வீரர். அதே போன்ற பந்து வீச்சாளர். நிச்சயமானவர். நம்பகமானவர்.

*ஒரு நாள் தரம்* - 2001 இல் முக்கோணக் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவையும், நியூசிலாந்தையும் தோற்கடித்தவர்கள். ஆனால் தென்னாபிரிக்க மண்ணிலேயே அவுஸ்திரேலியாவிடம் மோசமாகத் தோற்றவர்கள். மொரோக்கோ கிண்ணப் போட்டிகளில் இவர்களை இலங்கை மேவி நின்றது. ICC போட்டிகளில் இந்தியாவிடம் தோல்வி கண்டது. பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மீதான இறுதியான வெற்றிகள் நல்ல நம்பிக்கை.

*முன்னைய உலகக் கிண்ண சாதனைகள்* - சர்ச்சைக்குரிய விதிகள் கொண்ட ஒரு ஆட்டத்தில் (1 FOR 22). 92 அரை இறுதியில் இங்கிலாந்தால் வெளியேற்றப்பட்டது. 96 இல் கால் இறுதியில் மேற்கிந்தியாவிடம் தோற்று வெளியேறியது. 1999 இல் இவற்றைவிட துயரமான முறையில் அவுஸ்திரேலியாவிடம் தோற்று இறுதிப்போட்டியில் பங்குகொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்தது.

*எதிர்வு கூறல்* - இறுதிப் போட்டியில் விளையாடும்.

## கனவான்களாக அணி வீரர்கள்...

**பா**கிஸ்தான், அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் நடைபெற்ற - வக்கார் யூனுஸ் - அன்ட்ரு சிமென்ஸ் சம்பவம் எல்லோருக்கும் நினைவிருக்கும்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள வக்கார், அன்ட்ரு சிமென்ஸிடம் பகிரங்கமாக மன்னிப்


வக்கார் யூனுஸ் - திருந்த இடமுண்டு.

புக் கேட்டுள்ளார். வக்கார் கருத்துக் கூறும்போது - நான் YORKER LENGTH பந்தொன்றையே வீச முயன்றேன்.

ஆனால், எனது விரல்களின் கட்டுப்பாட்டில் இருந்து விலகிய பந்து சிமென்ஸின் தலையை நோக்கிப் போயிற்று. அடுத்த பந்தும் நான் BOUNCER போட முயன்ற பந்தல்ல. முதல் பந்துக்கு நடந்தது போலவே அடுத்த பந்துக்கும் நடந்தது என்று விளக்கமளித்தார்.

நான் திட்டமிட்ட வகையில் சிமென்ஸைக் குறிவைக்கவில்லை. இதனை நான் தெளிவாக விளக்கியுள்ளேன் என்கிறார்.

இந்த விளக்கத்தை சிமென்ஸும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

"என்னுடைய தலை பறந்தது என்றுதான் நினைச்சனான், இப்ப


அன்வர் - ரன் குவிக்கும் இயந்திரம்.

பிரச்சினையில்லை. வக்காரில எனக்கு ஒரு மனவருத்தமும் இல்லை" என்று கூறியுள்ளார்.

நல்லது. இரண்டு வீரர்களுமே தம் மனதில் கசப்பை வளர்த்துக் கொள்ளாமல் பரஸ்பரம் சரியாகவே நடந்து கொண்டுள்ளார்கள். இந்த இடத்தில்தான் CRICKET WINS.

*- நர்மதா.*

## யாருக்குத்தான் ஆசை இல்லை

இந்த உலகக்கிண்ண போட்டிகளுடன் நஸார் ஹுசைன், தலைமைப்பதவியில் இருந்து தான் விலகத் தயங்கப்போவதில்லை என்று கூறியிருப்பது சில தினங்களுக்கு முன்வந்த செய்தி.

அவர் அப்படி தலைமையை விட்டு விலகினால் கிரீடம் சூட்டிக் கொள்வதற்கு மிகக்குறைந்தவர்களின் பெயர்களே அடிபடுகின்றன. மைக்கல் வகன், மார்கஸ் டிரெஸ் கொதிக் ஆகியோரே அவர்கள்.

இது பற்றி மைக்கல் வகனிடம் கேட்டபோது - இப்போது அதுபற்றிய சர்ச்சை எழவில்லை. தற்போதைக்கு எனது துடுப்பாட்டம் பற்றியே கூடுதல் கவனம் செலுத்த வேண்டியவனாக இருக்கின்றேன்.

உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னரோ அல்லது ஒரு வருடத்தின் பின்னரோ எனது பெயர் முன் வைக்கப்பட்டால் அது விருப்பத்துக்குரியதாக இருக்கும். ஆனால், தற்போது நான் சாதாரணமாக விளையாடுவதிலேயே திருப்தியடைகின்றேன் என்கிறார்.

மேலும், தற்போதைக்கு நஸார் ஹுசைன் சிறப்பாகவே தன் அணித் தலைமைக் கடமையைச் செய்து கொண்டிருக்கிறார். நாங்கள் அவருக்குக் கொடுக்கவேண்டிய முழு ஒத்துழைப்பையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்கிறார்.


மைக்கல் வகன் - மன்னனாக முடிசூட மனதார ஆசைதான்.

மைக்கல் வகன் சர்வதேச தரத்தில் முதன்மை பெற்று விளங்கும் ஒரு வீரர். 98/99 இல் இங்கிலாந்தின் A அணித்தலைவராக தென்னாபிரிக்கா, சிம்பாப்வே நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோதே, இங்கிலாந்தின் அடுத்த அணித் தலைவர் இவர்தான் என்று ஊகிக்கப்பட்டது.

28 வயதாகும் இவர் - தான் கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ உள்ளது என்பதுடன், தலைமைப் பதவி ஒன்று கிடைக்கும்போது அதை யாரும் தூக்கி எறிந்து விடுவதில்லையே என்றும் கூறுகிறார்.

கடந்த ASHES சுற்றுப்பயணத்தின்போது அவுஸ்திரேலியாவின் பயங்கரத் தாக்குதல்களைச் சமாளித்த ஒரு சிலருள் இவரும் ஒருவர் அல்லது இவர் மட்டுந்தான் என்றும் கூறலாம்.

*- ரோஜா.*

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ண இறுதிப் போட்டியொன்றில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் எத்தனை?**

**291/8 - மேற்கிந்தியத்தீவுகள் Vs அவுஸ்திரேலியா (1975)**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பி. ஆர்ப்பாட்டத்தால் நாடாளுமன்றில் அமளிதுமளி

நாடாளுமன்றில் மக்கள் விடுதலை முன்னணியினர் சபை நடுவே ஆர்ப்பாட்டம செய்த காரணத்தால் நேற்றுக் காலை நாடாளுமன்றில் அமளி துமளி ஏற்பட்டது.

அமர்வுகள் ஆரம்பமான சமயம் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச எழுந்து நின்று, நேற்று முன்தினம் கொழும்பில் தாம் நடாத்திய ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் கலைத்தது குறித்து ஆட்சேபம் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து அவரது கட்சியின் ஏனைய உறுப்பினர்கள்- அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர்கள் சபை நடுவே பதாதைகளை ஏந்தியவண்ணம் கோஷம் எழுப்பினர்.

அரசாங்கத்தரப்பில் இருந்து அவர்கள் மீது ஒரு புத்தகம் வீசி எறியப்பட்ட பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்தது. இதனால், அமர்வுக்குத் தலைமைதாங்கிய, குழுக்களின் பிரதித்தலைவர் சிறி அந்தரா கெனடி சபையை சிறிது நேரத்துக்கு ஒத்தி வைத்தார்.

அரசாங்கத்தரப்பினருககும் ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட முனைந்த கலகத்தை, அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, பந்துல குணவர்த்தன ஆகியோர் தடுத்து நிறுத்தினர்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இன்றைய ஆட்டம்

இங்கிலாந்து Vs பாகிஸ்தான் - Newlands Capetown - 6.30 pm.

தென்னாபிரிக்கா Vs பங்களாதேஷ் - Goodyear Park, Bloemfontein -2 pm

# போராளிகளின் இடுப்புப்பட்டி அகற்ற வவுனியாவிலும் படையினர் முயற்சி!

வவுனியாவிலும் நேற்று பெண் போராளிகளின் இடுப்புப்பட்டிகளை அகற்ற படையினர் முனைந்துள்ளனர். இதனால் எழுந்த நிலைமைகளைத் தொடர்ந்து, கண்காணிப்புக் குழுவினர் இவ்விடயத்தில் தலையிட்டு சுமுகநிலையை ஏற்படுத்தினர்.

இது பற்றித் தெரியவருவதாவது-

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளின் நான்கு பெண் உறுப்பினர்களின் கறுப்பு இடுப்புப்பட்டிகளைக் கழற்றுவதற்கு இராணுவத்தினர் நேற்று முனைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொதுமக்கள் மூலம் எட்டிய தகவலை அடுத்து வவுனியா முக்கியஸ்தர்களும் கண்காணிப்புக் குழுவினரும் ஸ்தலத்திறகு விரைந்து விசாரணைகளை நடத்தி, பதற்றம் சூழ்ந்த நிலைமையைச் சுமுகமாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**சமாதான...**

பகுதிகளை இனிமேல்தான் தாண்டவுள்ளோம். முதல் வருடத்தில் நாம் ஈட்டியவற்றில் எனக்குத் திருப்தி இருக்கிறது. இப்போது இது குறித்து ஆழமாக ஆராய்ந்து முடிவுகள் எடுக்கின்றோம். எவ்வாறாயினும் அனைத்தும் சுமுகமாகவே இருக்கிறது. விரிவாக ஆராய வேண்டிய விடயங்களை நாம் இப்போது எதிர்கொண்டிருக்கிறோம். இவ்விடயங்கள் குறித்தே நாம் பிரச்சினையையும் எதிர்கொள்கிறோம்.

பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம், சமஷ்டி ஆட்சி முறை, ஆயுதக் களைவு விவகாரம் என்பவை இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக உள்ளன. எனினும், நாம் படிப்படியாகவே முன்னேறவேண்டியுள்ளது. மெதுவான இந்த முன்னேற்றத்தில் பின்னடைவுகள் இருப்பினும் - பல முன்னேற்றகரமான தீர்வுகளையும் அடைந்திருக்கிறோம். எப்போதும் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாகவே போய்க்கொண்டிருப்பதில்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க அப்பேட்டியில் தெரிவித்தார்.

**நல்லூரில்...**

விடவில்லை என வலியுறுத்தி, நாளை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நல்லூரில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சமாதான நீதிவான்களையும் கலந்துகொள்ளுமாறு, யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற சமாதான நீதிவான்களுக்கான கலந்துரையாடலில் சமாதான நீதிவான்கள் சங்கத் தலைவர் க. நாகராசா கேட்டுக்கொண்டார்.

சமாதான நீதிவான்கள் ஏற்பாடு செய்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

(ரா)

**கச்சதீவு...**

புதன் காலை கச்சதீவு சென்றனர். இவ்வருடம் அதிகளவு யாத்திரிகர்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால், கச்சதீவு அந்தோனியார் ஆலய வெளிச்சூழல் பெருமளவில் துப்புரவு செய்யவேண்டிய நிலையிலுள்ளதாக இக்குழுவினர் தெரிவித்தனர்.

கச்சதீவு சென்ற இக்குழுவினரை வரவேற்ற - அங்கு தங்கியிருந்த இந்திய மீனவர்கள் இக் குழுவினருக்கு மதிய உணவும் வழங்கினர்.

கச்சதீவு சென்ற குழுவினர் அன்று மாலையே நெடுந்தீவு திரும்பினர்.

இதேவேளை - ஆலய உற்சவத்துக்கு தென்னிந்தியாவிலிருந்தும் சில அருட்தந்தையர்களும் வருகை தரலாம் எனக்கூறப்படுகிறது.

(113)

# மின்னொளியில் போட்டிகள்

கிளிநொச்சியில் நடைபெறும் தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் நேற்று இரவு மின்னொளியில் நடைபெற்ற வலைப்பந்தாட்டத்தில் முல்லைத்தீவு அணியும் மட்டக்களப்பு அணியும் மோதிக் கொண்டன.

இதில் மட்டக்களப்பு அணி - 36:21 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. கரப்பந்தாட்டத்தில்- மன்னார் அணியும் மட்டக்களப்பு அணியும் மோதின. இதில் மன்னார் அணி 25:20, 25:12, 25:13 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

*(முன்வந்த செய்திகள் உள்ளே)*

## எண்ணெய் வண்டி விபத்தில் சேதம்

மருதனார்மடம் - றொட்டியாலடிப் பகுதியில், நேற்றுமாலை இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் மண்ணெண்ணெய் வண்டி பலத்த சேதமடைந்தது. வண்டி மாட்டின் காலும் முறிவடைந்தது. வண்டிலோட்டி தெய்வாதீனமாகக் காயமின்றித் தப்பினார். விபத்தினால் காங்கேசன்துறை வீதியில் சில நிமிட நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. (78)

**ஜப்பான்.....**

பாதிப்புக்கள் குறித்து ஜப்பான் குழுவினருக்கு எடுத்து விளக்கியதுடன், யாழ். குடாநாட்டில் வர்த்தகத்தைக் கட்டியெழுப்ப ஜப்பான் உதவி செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

பின்னர் ஜப்பானியக் குழுவினர்- தாம் நாடுகளுக்கு உதவி செய்யும் திட்டத்தின் கீழேயே யாழ்ப்பாணம் வருகை தந்திருப்பதாகத் தெரிவித்தனர். அத்துடன், இங்குள்ள பிரச்சினைகளை ஜப்பானிய அரசிற்கு சமர்ப்பிப்போம். இவற்றின் பிரகாரம் ஜப்பான் உதவிகளை வழங்கும். நாம் உதவிகளை வழங்கும்போது வடக்கிற்கும் தெற்கிற்கும் சமமாகத்தான் உதவிகளை வழங்குவோம் எனவும் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்று நண்பகல் யாழ். அரச அதிபர் பத்மநாதனுடனும் ஜப்பானியக் குழுவினர் கலந்துரையாடல் நடாத்தினர்.

இக்கலந்துரையாடலின்போது, யாழ். அரச அதிபர்- யாழ். குடாநாட்டு நிலவரம் தொடர்பாக விளக்கியதுடன், குறிப்பாக கடற்தொழில் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும், குடிநீர் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும், வடக்கில் அரிசி ஆலைகள் அமைப்பது குறித்தும் ஜப்பான் குழுவினருக்கு எடுத்துரைத்தார்.

அங்கு உரையாற்றிய ஜப்பானியக் குழுவினர் - நாம் இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் சமமாகத்தான் உதவிகளை வழங்குவோம். முதலில் ஆரமப நிலையிலிருந்தே நமது உதவிகளை வழங்குவோம். இவற்றில் ஏற்படும் முன்னேற்றத்திற்கு அமைய மேலும் தமது உதவிகள் அதிகரிக்கப்படும். நாம் இங்கு அவதானித்தவற்றையும் இங்கு நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பொருத்தமான திட்டங்களையும் அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்போம் எனவும் தெரிவித்தனர்.

இன்று, இக்குழுவினர் கடற்தொழில சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து - வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளனர்.

(க,லி,09)

# வன்னியிலிருந்து நெல் எடுத்துவர எவ்விதமான கட்டுப்பாடும் இல்லை

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து வெளியே நெல் எடுத்துச் செல்ல எவ்வித கட்டுப்பாடும் இல்லை என விடுதலைப்புலிகளின் வருவாய்ப் பகுதி அறிவித்துள்ளது.

புலகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியே நெல் எடுத்துச்செல்ல கட்டுப்பாடு இருப்பதாகப் பரப்பப்பட்டுள்ள செய்தி தவறானது. எவரும் நெல்லை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லலாம் என வருவாய்ப் பகுதிச் செயலகம் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

# முல்லைத்தீவு படையினருக்கு பொலிஸ் குழு நேரில் அஞ்சலி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்ப்பின்போது கொல்லப்பட்ட படையினருக்கு வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்த சிறிலங்காப் பொலிஸ் படைப்பிரிவு அஞ்சலி செலுத்தியது.

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக அம்பாறை மாவட்டத்திலிருந்து விசேட பொலிஸ் படைப் பிரிவு ஒன்று வன்னிப்பகுதிக்கு விஜயம் செய்தது. இப் படைப்பிரிவு நேற்று மாலை கொக்காவில் பகுதிக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தது.

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் கொல்லப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் கொக்காவிலில், கண்டி வீதிக்கு அருகாமையில் பூரண இராணுவமரியாதையுடன் விடுதலைப் புலிகளால் தகனம் செய்யப்பட்டன.

இவ்வாறு தகனம் செய்யப்பட்ட இடத்திலேயே நேற்று அம்பாறைப் பொலிஸ் படையணி கொல்லப்பட்ட இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வன்னிக்குச் சென்ற முதலாவது அரச தரப்புப் படையணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகனங்கள் ஒப்படையாவிடின் எதிர்த்து வழக்குத் தாக்கலாகும்

## உள்ளூராட்சி மன்றுகளுக்கு எச்சரிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

இதேவேளை, பல உள்ளூராட்சி மன்றங்களின் தொலை பேசிக் கட்டணங்கள் செலுத்தப்படாது நிலுவையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இவ் விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டது. இம்மாநாட்டிற்காக வட கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி விஜயலட்சுமி நேற்று யாழ் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்களை...

யின் பிரகாரம் படையினர் தயார் நிலையில் வைத்திருக்கப்படலாம் எனக் கூறப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சில இடங்களில் படையினர் தமது எண்ணிக்கையைக் குறைத்துள்ளதால் அவர்களின் பலம் குன்றியுள்ளது. இதன் காரணமாக ஸ்திரமற்ற நிலையும், அமைதியின்மையும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக அவர் கூறினார்.

அரசாங்கத்திற்கு இருப்பது போல் தமக்கு அதிகாரம் இல்லாததன் காரணமாக, விடுதலைப் புலிகள் அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பேசுவதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்த்துள்ளதாக அமைந்துள்ளது.

இந்த அமைப்புக்கு தலைமைத்துவமும், வெளிநாட்டு ஆதரவு இருப்பதும் மறந்துவிடலாகாது எனவும் புறூவ் ஹொவ்டே கூறியுள்ளார்.

மேலும் - இலங்கையைப் பொறுத்தமட்டில் அமைதி காக்கும் படையினரின் பிரசன்னம் அவசியமற்றது.

அமைதியை நிலைநாட்டுவது இரு தரப்பினருக்கும் உரித்தானது. அமைதியைப் பேணும்பொருட்டு தமக்கு முன்னே உள்ள பொறுப்புக்களை இரு தரப்பும் சுமந்து செல்லவேண்டும் என்றும்,

இரு தரப்பிலும் பிரிவினைச் சக்திகள் இருப்பதால் அதனையிட்டு அவதானமாக இருக்கவேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் வன்முறையைத் தூண்டிவிடலாம். இலங்கையின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க அரசினதும் விடுதலைப் புலிகளினதும் காவல்துறையினர் உள்ளடக்கிய நன்கு பயிற்றப்பட்ட இணைந்த நவீன பொலிஸ் படை அவசியம் என்றும் ஹொவ்டே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இருதரப்பும் சண்டையைத் தொடங்கி விடலாம் என்ற அச்சம், பயமுறுத்தல்கள் காணப்படுகின்ற போதிலும் பேச்சினை முடித்துக் கொண்டு சண்டைக்குச் செல்வது இரு தரப்பாலும் நடைமுறைக்கு சாத்தியப்பட முடியாத விடயம் என்று அறிவித்த அவர் -

விசேடமாக சண்டை என்பது விடுதலைப் புலிகளின் முதல் தெரிவல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

# மரண அறிவித்தல்

## முருகர் வேலாயுதம்

**(ஓய்வுபெற்ற அதிபர்,**
**யா/குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி.)**

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட முருகர் வேலாயுதம் நேற்று (21.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சீனிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, புன்னாலைக் கட்டுவன் அ.த.க. பாடசாலை) பாசமிகு கணவரும் ஜீவரூபன் (பகுதிநேர விரிவுரையாளர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), முத்து ரூபன் (**AROD**), சிவரூபினி (**U.K.**), தயாரூபினி, கர்ணரூபினி (யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்), தர்சாயினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீபரன் (**U.K.**), பரமானந்தம் (**K.S.A.**) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஸ்வா திகா, கோபிராம் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.02.2003) சனிக்கிழமை நடைபெற்று பி.ப. 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சித்திவிநாயகர் கொமினிக்கேசன்,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
**வே.முத்துருபன்**
**(மகன்)**

(254)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.